விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஆனி 24 ஷவ்வச 29 இதழ் 147

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 8-7-1986

## "தமிழர், முஸ்லிம்கொண்ட இரு உபஜனாதிபதி பதவிகள் ஏற்படுத்தப்படவேண்டும்!"

—தொண்டா

சென்னை, திங்கள் "இலங்கையில்சிறுபான்மை மக்கள் மத்தியில் பாதுகாப்பு ணர்வை ஏற்படுத்தும் வகையில் தமிழர் ஒருவரையும், முஸ்லிம் ஒருவரையும்கொண்ட இரு உபஜனாதிப்பதவிகள் ஏற் படுத்தப்படவேண்டும்" என்று கிராமிய சிறுகைத் தொழிற் துறை அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டுள்ள திரு. தொண்டமான் பத்திரிகையாளர் மத்தியில் நேற்று உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. தொண்டமான் மேலும் இலங்கையில் கிழக்கு மாகாணத்தில் தமிழர்க்கென ஒருதனிமாநிலம் இருக்க வேண்டுமென ஜனாதி

(5ம் பக்கம் பார்க்க)

## ஜூலை 15 அரசியல்கட்சிகள் மகாநாட்டில் பங்குபற்றல்:

# அரசாங்கத்தின் விளக்கத்தை பொறுத்து கூட்டணி முடிவு!

## புதுடில்லியில் அமிர் தகவல்!!

(புதுடில்லி)

**இனப்பிரச்னைக்குத் தீர்வுகாணும் வகையில் இலங்கை அரசாங்கம் வெளியிட்டுள்ள புதியயோசனைகளில் சிலவற்றுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி இந்திய அரசுமூலமாக இலங்கையிடம் விளக்கம் கோரியுள்ளது. இவ்விளக்கம் திருப்திகரமாக அமையும்பட்சத்திலேயே எதிர்வரும் 15ம் திகதி கொழும்பில் நடைபெறும் அரசியல்கட்சிகளின்கூட்டத்தில் பங்குபற்றுவதுகுறித்து த.வி.கூ. முடிவு எடுக்குமென திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் புதுடில்லி வந்தடைந்த தமிழர் விடுதலைக் கூட்டணிப்பிரமுகர்கள், இந்தியவெளியுறவுக்கொள்கை ஆலோசனைக்குழுத் தலைவர் திரு. ஜி.பார்த்தசாரதி, வெளியுறவுச்செயலர் திரு. ஏ. பி. வெங்கடேஸ்வரன், இணை அமைச்சர் ப.சிதம்பரம் மற்றும் ராஜதந்திர பிரமுகர்களை சந்தித்தனர்.

கூட்டணியினரிடம்இலங்கை அரசின் புதியயோசனைகள் குறித்து இந்திய தரப்பினரால் விளக்கமளிக்கப்பட்டது.

(5ம் பக்கம் பார்க்க)

## அரசின் யோசனைகள்:

## வடக்கு, கிழக்கு மக்களுக்கு விளக்க 4 கட்சிகள் முடிவு

கொழும்பு, திங்கள், இலங்கை அரசினால் முன் வைக்கப்பட்டுள்ள புதிய யோசனைகள், அவற்றுக்கான பல்வேறு கட்சிகளின் திருத்த ஆலோசனைகள் குறித்தும் வடக்கு-கிழக்கு மக்களுக்கு

(8ம் பக்கம் பார்க்க)

## காயங்கேணியில் கண்ணிவெடி ஜீப் சேதம்

மட்டக்களப்பு செவ் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்ட காயங்கேணி பாலத்தைப் பார்வையிடச் சென்ற பொலிஸ் வாகனங்களில் ஒன்று கண்ணிவெடியில் சிக்கியதால் அந்த வாகனம் முற்றாகச் சேதமடைந்ததுடன் அதிலிருந்த பொலிசாரும் கொல்லப்பட்டனர்.

நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் இக் கண்ணிவெடித் தாக்குதல் இடம்பெற்றது.

வாழைச்சேனைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் தலைமையில்

(5ம் பக்கம் பார்க்க)

## மட்டு. வவுணதீவில் நேற்று நீண்டநேர மோதல்!

[மட்டக்களப்பிலிருந்து நமது நிருபர்)

மட்டக்களப்புநகருக்கு அண்மையிலுள்ள வாவிக்கு மேற்கே படுவான்கரை, வவுணதீவில் போராளிகளுக்கும் அதிரடிப் படையினருக்குமிடையே நேற்று மாலை நீண்ட நேரமாக பலத்த மோதல் இடம்பெற்றது இச்சம்பவத்தில் பலத்த உயிர்ச்சேதமேற்பட்டிருக்கலாமென அஞ்சப்படு

(5ம் பக்கம் பார்க்க)

## பஸ்ஸில் சென்ற மலையகத் தமிழர்மீது குண்டர்கள் தாக்குதல்

ஹற்றன், திங்கள் தலவாக்கொல்லையில் பஸ்ஸில் பிரயாணம் செய்து கொண்டிருந்த மலையகத் தமிழர்கள் குண்டர் கோஷ்டியினால் தாக்குதலுக்குள்ளானார்கள்.

நேற்று முன்தினம் இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது.

கடந்தவாரம் பூண்டுலோயாத் தோட்டத்தில இடம் பெற்ற கலவரங்களைத் தொடர்ந்து பாதுகாப்புடன் சமாதானமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததும் பின்னர் அமைதிநிலவியதும் தெரிந்ததே.

நேற்று முன்தினம் காலை பொருட்கள் வாங்குவதற்காக நகர்பகுதிக்கு பஸ்ஸில் சென்ற தமிழ்தோட்டத் தொழிலாளர்களே தாக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (மா)

## மன்னாரில் 5 கடைகள் தீக்கிரை

மன்னார், செவ்வாய் மன்னார் நகரிலுள்ள 5 கடைகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதால், பல லட்சக்கணக்கான பொருள்கள் முற்றாகச் சேதமடைந்துள்ளன.

நேற்று முன்தினம் இரவு இப்பயங்கர சம்பவம் இடம் பெற்றது.

3 தமிழர்களிற்கும் 2 முஸ்லிம்களிர்கும் சொந்தமான கடைகளே தீக்கிரையாக்கப்பட்டன. [மா]

## வாகனேரிக் காட்டினுள் எரிந்த நிலையில் இரு இளைஞர் சடலங்கள்!

மட்டக்களப்பு செவ்வாய், மட்டக்களப்பு வாகனேரிக் காட்டுக்குள் துப்பாக்கிச் சூட்டு காயங்களுடன் எரிந்த நிலையில் இரு இளைஞர்களின் சடலம் நேற்றுக் காலை கிடக்கக்கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம்இரவு ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்ட வாழைச்சேனை கண்ணன் கிராமத்தைச்சேர்ந்த சற்குணநந்தன் [27 வயது] கொண்டலடிச்சோலையைச் சேர்ந்த ரவீந்திரன் [22 வயது] ஆகிய இருவரின் சடலங்களே என இவை அடையாளம் காணப்பட்டுள்ளது.

(5ம் பக்கம் பார்க்க)

## J.C.C. தனது புதிய சேவைகளுக்கு உங்களை அன்புடன் அழைக்கின்றது

உரும்பராய் சந்தைக்கு முன்னால் உள்ள மாடிக் கட்டிடத்தில் வருகிற புதன் (09-07-86) முதல் பின் வரும் சேவைகளை வழங்குகின்றது. காலை 7-45 மணிக்கு விற்பனையை திரு. ந. மகாலிங்கம் (மகான்) அவர்கள் ஆரம்பித்து வைப்பார்கள் உங்களுக்குத் தேவையான துவிச்சக்கரவண்டிகள், சைக்கிள் உபகரணங்கள், வீட்டுப் பாவனைகளுக்கு ஏற்ற எவர்சில்வர் பாத்திர வகைகள், பிளாஸ்ரிக் சாமான்கள், அலுமினிய பாத்திரங்கள், கல்லூரி மாணவிகளுக்கும் நங்கையருக்கும் தேவையான லேஸ், றிபன், தொப்பி, சட்டைப் பொத்தான்கள், கிளிப், சாந்துப்பொட்டு, குங்குமம் இன்னும் பல பொருட்கள், சிறுவர்களுக்கான விளையாட்டு சாமான்கள், பாடசாலை உபகரணங்கள், தகரக் கொட்டகைகள், இரும்புக் கதிரைகள், (வாடகைக்கு).

உங்கள் இனிமையான ஆதரவை பணிவுடன் நாடும்:

**J. C. C. நிறுவனம்,**

உரும்பராய் சந்தி, உரும்பராய்.

[C-3354]

## தீவுக்கரைகளில் தினமும் சடலங்கள் கரை ஒதுங்குகின்றன!

வேலணை, திங்கள் தீவுப்பகுதி கரையோரங்களில தினமும் மனித சடலங்கள் கரை ஒதுங்குகின்றன. கடந்த இருமாதங்களாக நெடுந்தீவு, வேலணை வெள்ளைக்கடற்கரை, புங்குடுதீவு தெற்குப்பகுதி கடற்கரை யோரங்களிலேயே பெரும்பாலான சடலங்கள் கரை சேர்ந்துள்ளன.

சடலங்களை தவிர மூன்று மீன்பிடி இயந்திரப்படகுகளும் கரை சேர்ந்துள்ளன இவை தென் இந்திய மீனவர்களின் படகுகள் என அடையாளம் காணப்பட்டுள்ளன. கடந்த இருவாரங்களில் சுமர் ஒன்பது சடலங்கள் உருக்குலைந்த நிலையிலும் முண்டங்களாகவும் கரையொதிங்கியிருந்தன.

இதேவேளையில் ஐந்துபேர் உயிருடன் புங்குடுதீவு தெற்குக்கரையை அடைந்துள்ளனர்.

தீவுப்பகுதியில் கரையொதுங்கும் சடலங்கள் உடனுக்குடன் இளைஞர்களால் தகனம் செய்யப்பட்டுவருகின்றன.

## மாணவனின்: சூட்கேஸ் ஏற்படுத்திய குண்டுப்புரளி

கொழும்பு, திங்கள் கொழும்பு புறக்கோட்டை பஸ் நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த பஸ் ஒன்றில் சூட்கேஸ் ஒன்று கைவிடப்பட்ட நிலையில் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து அவ்விடத்துக்கு ராணுவ குண்டு

(8ம் பக்கம் பார்க்க)

# அசி ஊளம்பரம்

## விற்பனைக்கு

புதிய மிகவும் குறைந்த கிலோ மீற்றர் ஓடிய Honda CD125 Twin மோட்டார்சயிக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு; ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ் [பெற்றோல் செற் முன்பாக] காங்கேசன்துறை. [C-3335]

சுன்னுகம் சந்தைக்கும், இராமநாதன் கல்லூரிக்கும் இடையில் உள்ள சபாபதி வீதிக்கு அருகில் வீடும், கடையும், 5 பரப்புக் காணியுடன் உடன் விற்பனைக்குண்டு. க. சிவசுப்பிரமணியம் C/o எஸ். நடராசா, பெரிய மதவடி, உடுவில் கிழக்கு, சுன்னுகம் (C 3319)

உடுவில் தெற்கு, சத்திய புரத்தில் 2 1/2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: V. S. இராசதுரை, சண்டிலிப்பாய் கிழக்கு, சண்டிலிப்பாய். (C3343)

அரசியலில் ஈடுபாடு கொண்டவர்களிடம் இருக்கவேண்டிய நூல்: 'இலங்கையின் அரசியல் திட்டங்கள்' ஆக்கியோன்: அம்பலவாணர் சிவராசா B A. (Hons) M. A. (Canada) அரசறிவியல் சிரேஷ்ட விரிவுரையாளர் பேராதனைப் பல்கலைக்கழகம். பல்கலைக்கழக புகுமுக மாணவர்களும், பட்டதாரி மாணவர்களும் கேட்டதற்கமைய இரண்டாம் பதிப்பாக வெளிவந்துள்ளது. விலை ரூபா 27/50. பக்கங்கள் 152. பதிப்பாளர்: ஆறுமுகம் கந்தையா J P., சிவா பிறின்டேர்ஸ், மெயின் வீதி, கைதடி. (C 3299)

## தேவை

பாண், பிஸ்கட் தயாரிப்பதில் அனுபவமுள்ளவர்களும் பாண், பிஸ்கட் விற்பனை செய்யக்கூடியவர்களும் தேவை. தகுந்த சம்பளம், கமிசன் வழங்கப்படும். விபரங்களுக்கு நேரில் வரவும். கிறீன் ஸ்ரார் பேக்கவுஸ். மாதகல். C-3344

## தவறிவிட்டது

சுன்னுகத்துக்கும் யாழ். நகருக்கும் மத்தியில் எனது முக்கியமான பிலிம் சுருள் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். S. தேவலிங்கராஜா இல. 44, கடவைப்புலம் லேன், சுன்னுகம். (C3342)

முற்றிலும் தன்னியக்க இயந்திரங்கள் மூலம் தயாரானது




★ தெய்வீகமானது
★ உருகாது
★ கருகாது
★ நெடுநேரம் எரியக்கூடியது
★ பிரகாசமானது

(A-768)

## வகுப்புகள்

புதிய, காலைநேர நாளாந்த ஒரு மணித்தியால வகுப்பு Spoken English ஆரம்பமாகின்றது ஆசிரியர் S. B. Iyar, இடம் 12, வைபன் வீதி, நல்லூர் நேரம காலை 7மணி-8 மணி வரை. ஆரம்பமாகும் நாள் வருகிற 10ம் திகதி வியாழன். (C-3333)

தபால்மூலம் லண்டன் பரீட்சைக்களுக்கான Book-keeping and Accounts யாவர்க்கும் உகந்த வகையில் Spoken English அடங்கிய ஆங்கிலப் பாடமும் போதிக்கப்படும். நேரிலும் இப்பாடங்களுடன் தமிழ், ஆங்கில சுருக்கெழுத்து, தட்டெழுத்து வகுப்புகள் வார, வார இறுதி நாட்களில் நடைபெறுகின்றன. இம்பீரியல் இன்ஸ்ரிரியூட்ஸ், மெயின் வீதி, இளவாலை. (C3160)

## காணவில்லை

கந்தசாமி என்றழைக்கப்படும் 12 வயதுச் சிறுவனை 4-7-86 முதல் காணவில்லை கறுப்பு நிறம், மெல்லிய தோற்றம், தலைமயிர் கட்டையாக வெட்டியவர். கடைசியாக மண்நிறக் காற்சட்டை அணிந்திருந்தார். செட்டித்தெருவில் உள்ள கடைக்குச் சென்றவர் திரும்பவில்லை. தகவல் தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். சி. கந்தையா, 7, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (C3338)

05-07-86 அன்று பிற்பகல் 2 மணியளவில் K. K. S வீதியில் உள்ள அம்பலவாணர் அன்சன்ஸ் கடைக்கு முன்னுள் நிறுத்தப்பட்டிருந்த 005 AB 0012 என்னும் இலக்கமுடைய கரும்பச்சை நிறமுள்ள மகனுடைய புதிய ஏசியா சைக்கிளைக் காணவில்லை. இச்சயிக்கிளைத் தவறுதலாக எடுத்தவர்களாயிருப்பினும், அடையாளம் காண்பவர்கள் பின்வரும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். திரு. க. மாணிக்கராசா, 48/1 அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (C-3339)

### மின்தறி நெசவாலை

## குத்தகைக்கு

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மின்தறி நெசவாலையைக் குத்தகைக்குப் பெற்று துணி உற்பத்தி செய்ய விரும்புவோர் 19-7-86க்கு முன் நேரில் தொடர்பு கொள்ளவும். 39 அங்குல அகலமுள்ள பருத்தி, பொலியெஸ்டர் துணிவகைகளை உடனடியாக நெசவு செய்யக் கூடிய 23 மின்தறிகளும், நூல்சுற்றும், யந்திரமும் மற்றும் தேவையான உபகரணங்களும் நல்ல நிலையில் இருக்கின்றன. மேற்படி நெசவாலை நுணுவில் மேற்கில்பிரதான வதியில் அமைந்துள்ளது மேலும் விபரங்களை நேரில் வந்து அறிந்துகொள்ளலாம்.

சி. வ. வைத்தியலிங்கம் ஜே பி.
தலைவர்,
சாவகச்சேரி
ப. நோ. கூ. சங்கம்.

சாவகச்சேரி,
3-7-86. [A-913]

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவிததல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

தையிட்டி காங்கேசன் துறையைச் சேர்ந்த காலஞ்சென்ற வயிரவப்பிள்ளை பாலகிருஷ்ணன் என்பவரின் மரணசாதன மற்ற மரணச் சொத்துக்களின் விடயத்தில்.

மரணமெய்தியவர்.

மரணசாதன நியாயாதிக்கம் } இல. ரி/282

பாலகிருஷ்ணன் கைம்பெண் மீனகாந்தி. பருத்தித்துறை வீதி, காங்கேசன்துறை.

மனுதார்.

எதிராக பராயமற்றவர்கள்

1. பாலகிருஷ்ணன் மகள் அனுஷ்யா.
2. பாலகிருஷ்ணன் மகள் துஷ்யா.
3. பாலகிருஷ்ணன் சுஷானந்தன் (1-3ம் எதிர்மனுதார்கள் பராயமற்றவர்கள். தங்கள் பாதுகாவலர் 4-ம் எதிர்மனுதார் மூலம்)
4. ஆறுமுகம் பொன்னையா, எல்லோரும் பருத்தித்துறை வீதி, காங்கேசன் துறை.

எதிர்மனுதார்கள்.

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட மரணமெய்தியவரின் மரணச் சொத்துக்களை நிரூபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவராவது 1986ம் ஆண்டு யூலைமாதம் 30ம் திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன கட்டளையாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1986ம் ஆண்டு யூன் மாதம் 25ம் திகதி.

கோட்டுக்கட்டளைப்படி,

**வி. இராமச்சந்திரஐயர்,**
பதிவாளருக்காக.

வரைவு:
மு. யோகருமார்,
மனுதாரின் சட்டத்தரணி.
(C 3314)

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற தும்பளை மயில்வாகனம் கிட்டிணபிள்ளை என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர்.

கிட்டிணபிள்ளை கைம்பெண் சிவக்கொழுந்து தும்பளை, பருத்தித்துறை.

மனுதார்.

மரணசாதன நியாயதிக்கம் இல. 1234/த

எதிர்

1. கிட்டிணபிள்ளை சந்திரன்
2. கிட்டிணபிள்ளை சற்குணம்
3. கிட்டிணபிள்ளை நாகருசன்

எல்லாரும் தும்பளை, பருத்தித்துறை.

—எதிர்மனுதார்கள்.

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக/மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறன்து

அக்கறையுள்ள ஆள்எவரும் 1986ம் ஆண்டு ஆவணி மாதம் 29ந் நாளன்று முற்பகல் 9 30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி

ச. நடராசா
(ஒப்பம்)
பதிவாளர்.

ஆக்கம்
**இராமசுவாமி சதானந்தன்**
சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்.
புலோலி தெற்கு, புலோலி.

1986ம் ஆண்டு ஆனி மாதம் 24ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது. [A910]

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## வைத்திய சிகிச்சை

புலோலி, திங்கள்

கரவெட்டி திருஇருதயக் கல்லூரி மாணவ, மாணவிகளின் நலன்கருதி விக்கினேஸ்வரா ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையம் வைத்திய சிகிச்சை' முகாம் ஒன்றை நடாத்தியது: இவ்வைத்திய சிகிச்சைமுகாமிலே சுமார் 125 மாணவ, மாணவிகள் வைத்திய சிகிச்சைகளைப் பெற்றனர். பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே. லலித்குமார், டாக்டர் எஸ். திருச்செல்வம், டாக்டர் கே. கிருஷ்ணபிள்ளை ஆகியோர் வைத்திய சிகிச்சைகளை வழங்கினர்.

## மக்கள் கடை

புலோலி, திங்கள்

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் மக்கள் கடை ஒன்றைத் திறந்து வைக்கவுள்ளது. இம் மக்கள் கடையைத் திறந்துவைப்பதற்கான துரித நடவடிக்கைகளை சங்க இயக்குநர் சபைத் தலைவர் திரு எஸ். நடராசா மேற்கொண்டுள்ளார்.

## பகவத்கீதை சொற்பொழிவு

யாழ்ப்பாணம், செவ்.

எதிர்வரும் 12ம்திகதி சனிக்கிழமை மாலை 4 மணியளவில் திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள ராமக்கிருஷ்ணலயத்தில் பகவத்கீதை விரிவுரை சுவாமி சித்ரூபானந்தாவினல் நடாத்தப்படவுள்ளது.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்.

காலஞ்சென்ற யாழ்ப்பாணம் ரெம்பிள் வீதி ஒழுங்கை, 42/1ம் இலக்கத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை இமானுவேல்பிள்ளையின் மரணசாதனமின்றி இறந்த மரணச்சொத்துகள் சம்பந்தமாக.

காலஞ்சென்றவர்.

அந்தோனிப்பிள்ளை இம்மனுவேல்பிள்ளைகைம்பெண் பெண் திரேசம்மா. இல. 42/1, ரெம்பிள்வீதி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

மனுதார்.

வழ. இல; தத்துவம் 3970

மேலே இலக்கம்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட காலஞ்சென்றவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப்பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்றையுள்ள ஆள் எவரேனும் 1986ம் ஆண்டுஆடிமாதம் 11ந்திகதியன்று முற்பகல் 9 00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றார்.

1986ம் ஆண்டு வைகாசி மாதம் 26ந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,

கு. குலசிங்கம்
பதிவாளர்.

வரைந்தது:
கே. செல்வநாயகம்
மனுதாரின் பதிவுபெற்ற சட்டத்தரணி. (C 3311)

## பணிவான வேண்டுகோள்

84 ஸ்ரீ 5277 (நீல நிற CD 200 HONDA மோட்டார் சைக்கிள்)

கடந்த 3-7-86 வியாழன் இரவு 9-30 மணியளவில் எனது சுன்னுக இல்லத்திலிருந்து இயக்கத்தின் பெயரைச் சொல்லி பலவந்தமாக மோட்டார் சைக்கிளை பறித்துச் சென்றுவிட்டார்கள். இதனுல் எனது அன்றாட முக்கிய கடமைகளைச் செய்யமுடியாமல் கஷ்டப்படுகின்றேன். புனித இயக்கங்கள் தயவு செய்து இதில் தலையிட்டு எனது மேற்படி மோட்டார் சைக்கிளை பெற்றுத்தரும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

சோமாஸ்கந்தக் குருக்கள்.
சுன்னுகம். (A 914)

## Technical Courses

1. Draughtsman Apprentice ship.
2. Refrigeration and Airconditioning
3. Electrical Wiring Course.
4. T. V. and Radio Technician.
5. Tamil Short hand Typing.

ஆகிய பயிற்சி நெறிகள் எமது நிறுவனத்தில் 12-07-86ல் ஆரம்பமாகின்றன.

மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்க:-
REGISTRAR,
Institute of Technical Studies,
VADDUKODDAI. C-3348

# இந்திய அரசியலின் மூத்த தலைவர்— ஜெகஜீவன்ராம் மறைவால்

# இந்தியா சோக மயம்

## பெருந்திரளான மக்கள் தலைவருக்கு அஞ்சலி

புதுடில்லி, ஜூன்-7

இந்திய அரசியலின் மூத்த தலைவர் திரு. ஜெகஜீவன்ராமின் மறைவையொட்டி இந்தியா பெரும் சோகக் கடலில் ஆழ்ந்துள்ளது. அரசாங்க நிறுவனங்கள் யாவும் மூடப்பட்டுள்ளதுடன் தேசியக் கொடிகள் யாவும் அரைக்கம்பத்தில்பறக்க விடப்பட்டுள்ளன.

பெருந்திரளான மக்கள் மறைந்த தலைவரின் பூதவுடலுக்குத் தமது அஞ்சலியைச் செலுத்தினர். மலர் வளையங்களும், அனுதாபச் செய்திகளும் வந்து குவிந்தவண்ணமுள்ளன.

புதுடில்லியில் வைக்கப்பட்டிருந்த தலைவரின் பூதவுடல் பீரங்கி வண்டி ஒன்றின் மூலம் நேற்றுக் காலை புதுடில்லி பாலம் விமான நிலையத்திற்கு கொண்டுவரப்பட்டு விசேட விமானப்படை விமானமொன்றின்மூலம் பட்னா எடுத்துவரப்பட்டது.

### உலகச் செய்திகள்

பீகார் முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களால் பொறுப்பேற்கப்பட்ட பூதவுடலுக்கு திரு ராமின் சொந்த ஊரான சாண்டுவாவில் சகல அரசமரியாதைகளுடன் இறுதிச் சடங்குகள் நடத்தப்படுமென்று தெரிவிக்கப்பட்டது.

இச்சடங்கில் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி, ஜனாதிபதி ஜெயில்ஸிங் உட்படப் பல முக்கிய அமைச்சர்கள் கலந்து கொள்வார்கள் என்று அறிவிக்கப்பட்டது. [ரா]

## "ஷியாவின் ஆட்சிக்கு எதிரான— அடுத்த ஆர்ப்பாட்டம் ஆகஸ்டில் நடக்கும்"

### பெனஸிர் பூட்டோ அறிவிப்பு

கராச்சி, ஜூன்-7

பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் ஷியா வுல் ஹக்கின் ஒன்பது வருடகால ஆட்சிக்கு எதிரான அடுத்த ஆர்ப்பாட்டத்தினை ஆகஸ்ட் மாதம் 14ம் திகதி நடத்தவுள்ளதாக செல்வி பெனஸிர் பூட்டோ அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கராச்சியில் நிருபர்கள் மத்தியில் பேசும்போதே செல்வி பெனஸிர் இதனைத் தெரிவித்தார்.

இடைக்காலத் தேர்தல் ஒன்று நடத்தப்பட வேண்டும் என்பதற்கு ஷியாவின் ஆட்சியைச் செவிசாய்க்க வைப்பதே இவ்வார்ப்பாட்டத்தின் நோக்கம் என்றும் செல்வி பூட்டோ கூறினார்.

இதேவேளை கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஊர்வலம் கைகலப்பில் முடிவடைவதற்கு ஷியாவின் ராணுவமே பொறுப்பென்றும் கண்டனம் தெரிவித்துள்ளார். [ரா]

## பஸ் விபத்து: 13 பேர் பலி 44 பேர் காயம்

புதுடில்லி, ஜூன்-7

உல்லாசப் பயணிகளின் பஸ் ஒன்று விபத்திற்குள்ளானதால் 13 பேர் பலியாகியுள்ளதுடன் 44 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

மான்பூருக்கு அருகில் இடம்பெற்ற இவ்விபத்தில் காயமடைந்தோரில் 14 பேரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது. [ரா]

## கைது

பூநகரி, திங்கள்

சில்லாலையைச் சேர்ந்தவரும் நாச்சிக்குடா தீவில் விவசாயம், அரிசிமில் வைத்திருப்பவருமான யோசப் மரியநாயகம் என்பவரை நாச்சிக்குடாவுக்குப் போகும் வழியில் பூநகரியில் நான்காம் கட்டை இராணுவத்தினர் கைது செய்துள்ளனர்.

## அக்கினோ அரசுக்கு எதிராக சதி?

மணிலா, ஜூலை-7

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி திருமதி அக்கினோவின் ஆட்சியைக் கவிழ்க்கும் சதியொன்றில் அந்நாட்டு எதிர்க்கட்சித் தலைவரான ஆர்ட் சொலஞ்சினோவும், வேறு சில இராணுவ ஜெனரல்களும் ஈடுபட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இந்தச் சதிமுயற்சியின் ஆரம்ப நடவடிக்கையாக எதிர்க்கட்சியின் தலைவர் திரு ஆர்ட் சொலஞ்சினோ பிலிப்பைன்ஸின் பிரதி ஜனாதிபதி தான் தானென்று தம்மைத் தாமே பிரகடனப் படுத்தியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

திரு. சொலஞ்சினோ தற்பொழுது ஹோட்டலொன்றில் தங்கியிருப்பதாகவும், ஆரம்பத்தில் அவருக்கு ஆதரவாகவிருந்த இருநூற்றுக்கும் அதிகமான படையினரில் பெரும்பாலானோர் அவரைக் கைவிட்டுவிட்டதாகவும், இந்நிலையில் நூற்றுக்கும் குறைவான படையினரே அவருடன் இருப்பதாகவும் கூறப்பட்டது.

தமக்கு எதிரான எதிர்ப்பினைச் சமாளிக்கும் வகையில் அக்கினோ அரசு சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளதாகவும் கூறப்பட்டது. [ரா]

## போதைப்பொருள் குற்றச்சாட்டு: ஆஸி. இளைஞர்களுக்கு மலேசியாவில்மரணதண்டனை

கோலாலம்பூர், ஜூன்-7

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த இரு இளைஞர்களுக்கு நேற்று அதிகாலை மலேசியாவில் மரணதண்டனை வழங்கப்பட்டது.

பெண்ணிங் வாலோ, பென்னிங் சேம்பிள் என்னும் இருபத்தெட்டு வயதினர்களான இவ்விளைஞர்கள் இருவருக்கும் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டின்பேரில் மரணதண்டனை வழங்கப்பட்டது.

இவ்விரு இளைஞர்களும் மன்னிப்புக் கோரி விண்ணப்பித்திருந்தபோதிலும் இறுதிநேரம் மலேசிய உயர்நீதிமன்றத்தால் அது நிராகரிக்கப்பட்டது. மலேசியாவில் மேற்கத்தேய நாட்டவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது இதுவே முதற் தடவையென்று கூறப்படுகின்றது. [ரா]

## "பண்டிதமணி தமிழுக்கும், சைவத்துக்கும் இறுதிவரை உழைத்தவர்"

நெல்லியடி, திங்.

'நூற்றுக் கணக்கான ஆசிரியர்களையும் கல்விமான்களையும் உருவாக்கியது மட்டுமன்றி தமிழுக்கும் சைவத்துக்கும் தனது இறுதி மூச்சுக்கள்வரை உழைத்த பெருமையும் பண்டிதமணி திரு சி. கணபதிப்பிள்ளையையேசாரும். மொழித் துறையில் மட்டுமன்றி தமது வாலிபப் பருவத்தில் சமூகத் துறையிலும் தீவிர பங்கு கொண்ட பண்டிதமணி, யாழ்ப்பாணம் இளைஞர் காங்கிரசுடன் இணைந்து சமாசன, சமபோசன இயக்கங்களிலும் பங்கு கொண்டு சாதிவெறியைச் சாடத் தயங்கவில்லை.'

இவ்வாறு, கட்டைவேலி-நெல்லியடி ப. நோ. கூ. சங்கத்தின் ஆதரவில் மேற்படி சங்க மண்டபத்தில் நடைபெற்ற பண்டிதமணி கணபதிப்பிள்ளை, எழுத்தாளர் கே டானியல், சரத்முத்தெட்டுவேகம ஆகிய மூவருக்கும் நடைபெற்ற அஞ்சலிக்கூட்டத்தில் உரையாற்றிய சைவப் புலவர் திரு. சி. வல்லிபுரம் குறிப்பிட்டார்.

சங்கத்தலைவர் திரு. த. சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு. கருணையோகன் உரையாற்றும் போது பண்டிதமணி நாவலர் தோட்டத்து இறுதிக்கணமும் சமூகப் பிரச்சினைகளையும் பண்டிதமணி சமயக் கண்ணோட்டத்திலேயே அணுகினார், என்றும் குறிப்பிட்டார்.

திரு. சி. சின்னத்தம்பி உரையாற்றும் போது, அமரர் டானியல் தமது சிறு கதைகள், நாவல்கள் மூலமும் பேச்சின் மூலமும் இன்றைய சமூகப் பிரச்னைகளை அரசியல் போராட்டங்கள் மூலமே தீர்க்க முடியுமென்ற கருத்துக் கொண்ட ஒரு பொருள்முதல் வாதியாக விளங்கினர் என்ஞர்.

ஆசிரியரும் கரவை விக்னேஸ்வராக் கல்லூரி உப அதிபருமாகிய திரு. கே. சிதம்பரநாதன் உரையாற்றிய போது, அமரர் சரத் முத்தெட்டுவேகம ஒடுக்கப்பட்ட மக்களின் தனியொரு குரலாகப் பாராளுமன்றத்துக்குள்ளும் புறமும் விளங்கியதால் இலங்கையில் வாழும் சகல இன மக்களாலும் போற்றப்படுகிறார் என்றார்.

திருவாளர்கள் வன்னியகுலம், எஸ். விஜயானந்தன், க. சிதம்பரப்பிள்ளை, நெல்லை. க. பேரன் ஆகியோரும் உரையாற்றினர்.

## முயல் வளர்ப்பு கருத்தரங்கு

கண்டுக்குளி, திங்கள்

நவாலி தெற்கு கிராம அபிவிருத்திச்சங்கத்தினரால் அண்மையில் நவாலி வை. எம். சி ஏ. மண்டபத்தில் முயல் வளர்ப்புப்திட்டம் பற்றிய கருத்தரங்கு நடாத்தப்பட்டது.

தலைவர் திரு, டபிள்யூ என். தேவசுடாட்சம தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் அப்பகுதி பாடசாலை மாணவ மாணவியர்களும் பொதுமக்களும்கலந்துகொண்டனர்.

இதில் முயல்வளப்புத்திட்டத்தால் நாம் பெறும் பலாபலன்கள் பற்றியும் அதன் வளர்ப்பு முறைகள் பற்றியும் மிகவிரிவான முறையில் உடுவில் வை. எம். சி. ஏ. யைச் சேர்ந்த திரு, எல். சி. கனகசிங்கம், திரு எஸ். சற்குணநாதன் ஆகியோர் எடுத்துக் கூறினர்.

## "பிரஜைகள் குழுக்கள் தமிழர் துயர் களைவதில் பெரும் பணியாற்றுகின்றன"

யாழ்ப்பாணம், செவ்வாய்

"நாட்டில் நிர்வாகம் சீரற்ற இவ் வேளையில் தமிழ்ப் பிரதேசங்களில் மக்கள் படும் இன்னல்களைக் களைவதில் பிரஜைகள் குழுக்கள் பெரும் பணியாற்றுகின்றன. மக்களும் தமது தேவைகளை நிறைவேற்ற இக்குழுக்களை நாடுகின்றனர். எதிர்காலத்தை நோக்கி வாழத்துடிக்கும் மக்களுக்கு இயன்றளவு உதவி செய்து வழிகாட்ட வேண்டிய பொறுப்பு இங்கு தெரிவாகி உள்ள செயற்குழு அனைவரினதும் தலையாய கடமையாகும்."

இவ்வாறு ஏழாலை கிராமத்தில் அமைக்கப்பட்ட பிரஜைகள் குழுவின் வருடாந்தக் கூட்டத்தில் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட திரு. சி. கந்தசாமி கூறினார்.

அண்மையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் பின்வரும்தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

"நாட்டில் அமைதியும், சமாதானமும் நிலவும் வகையில் அனைத்து இந்து, கிறிஸ்தவ ஆலயங்களிலும் பிரார்த்தனைகளில் மக்களை ஈடுபடச் செய்தல், மேலும் தினசரி பத்து நிமிடங்களேனும் அமைதிக்காக தனிமையில பிரார்த்தனையில் ஈடுபடவேண்டும்"

'இல்லங்களை இழந்து அல்லலுறுவோர் துயர்துடைக்க நிலையான ஒரு நிதியத்தை ஏற்படுத்துதல், உணவுப் பொருட்களைச் சேகரித்துக் களஞ்சியப் படுத்துதல், குழுவின் உறுப்பினர் தொகையை உயர்த்துதல், ஏழாலை மக்களுக்கென அமைந்துள்ள 'உசத்தியோடை' மயானத்தைச் சீரமைத்தல், இராணுவ நடவடிக்கையினால் உயிர் நீத்த அனைவரதும் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்தனை செய்தல், பாரம்பரிய கலை, கலாசாரம் இவை சிதைவுறா வண்ணம் போற்றிக் காத்தல், கிராம மக்களிடையேபிணக்குகள் ஏற்பட்டவிடத்து அவற்றைச் சமாதான நடவடிக்கை மூலம் தீர்த்து வைக்க முயற்சி செய்தல், பிரஜைகள் குழுக்களின் கூட்டுக் குழுவின் முடிவிற்கேற்பச் செயற்படுதல்."

## முதலுதவிப் பயிற்சி அவசியம்

புலோலி திங்கள்

"கிராமங்களில் வாழும் மக்கள் எல்லோரும் முதலுதவிப் பயிற்சிகளைப் பெற்றிருக்க வேண்டும் கிராமங்களில் முதலுதவி நிலையங்கள் இயங்க வேண்டியது மிக முக்கியமாகும். முதலுதவிப் பயிற்சிகளைப் பெற்றிருப்போர் ஏனையோருக்குச் சிறந்த சேவைகளை வழங்க முடியும்."

இவ்வாறு வடமராட்சி வடக்கு கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவு சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் கிளையை அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரையாற்றிய உதவி அரசாங்க அதிபர் திரு. வி வேலும்மயிலும் குறிப்பிட்டார்

மந்திகை மெதடிஸ் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை மண்டபத்தில் மேற்படி கூட்டம் நடைபெற்றது.

## கரை ஒதுங்கிய சடலங்களைத் தகனம் செய்தனர்

வேலணை, செவ்

அல்லைப்பிட்டியிலுள்ள சாட்டி கடற்கரையில் ஒதுங்கிய இரண்டு சடலங்களையும், வேலணைத்துறையில் ஒதுங்கிய 10 சடலங்களையும் 'ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி' (ஈ பி. ஆர். எல். எவ்) வேலணைத்துறை கடற்றொழில் கிராமிய சமூக அபிவிருத்தி அமைப்பினருடன் ஒன்றிணைந்து தகனம் செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 5ம், 6ம் திகதிகளில் இச்சடலங்கள் கரை ஒதுங்கியிருந்தது தெரிந்ததே.

கடல் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப்பலியான மீனவர்களின் சடலங்களே இவை என்றும் மேலும் பல சடலங்கள் கடலில் மிதந்த வண்ணமிருப்பதை தாங்கள் அறிந்துள்ளனர் என்றும் ஈ பி ஆர் எல். எவ். விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## நுண்கலைப்போட்டி

உடுவில், திங்கள்

மானிப்பாய் வட்டார பாடசாலைகளுக்கிடையிலான இசை, நடன நாடகப் போட்டிகள் யாவும் உடுவில் இராமநாதன் கல்லூரியில் ஜூலை மாதம் 19ம் திகதி நடைபெறும்.

### மணிவாக்கு

''ஹரிஜனங்களை நுழையவிடாத கோயிலைப் பாம்பு இருக்கும் இடத்தைப்போல் கருதிப் புறக்கணிக்கவேண்டும், இந்துக்கோயில்களில் கடவுள் இல்லை என்று நான் சொல்வது இதனால்தான்.''

—மகாத்மா காந்தி.

# நமது நோக்கு

## ஒதுக்கப்பட்ட மக்கள்

''களி மண்ணிலிருந்து கதாநாயகர்களை உருவாக்கியவர் மகாத்மா காந்தி; ஒருவேளை நாம் மீண்டும் களிமண்ணுய்ப் போய்விட்டோமோ?'' என்ற சந்தேகத்தை காலஞ்சென்ற இந்தியப்பிரதமர் இந்திரா ஒரு முறை எழுப்பியிருந்தார்.

மகாத்மா உருவாக்கிய கதாநாயகர்கள் மிகத் தலை சிறந்த தலைவரே. 33கோடி தாழ்த்தப்பட்ட மக்கள் என்று கருதப்பட்ட செடூல் (Scheduled) வகுப்பினரின் முதுபெரும் தலைவர் ஜெகஜீவன் ராம்.

இந்திய சுதந்திரப் போராட்டம் கண்ட தலைவர்களில் இன்னும் உயிருடன் இருப்பவர்கள் இன்றைய இந்தியாவில் தங்கள் அன்றைய அற்புத சாதனைகள் நம்பத்தக்க வகையில் இல்லை என்று எண்ண இடமுண்டு. ஒதுக்கப்பட்ட 33 கோடி மக்களின் நல்வாழ்வுக்காக உழைத்த தலைவர் ஜெகஜீவன்ராமின் சாதனைகள் அத்தகையவை. அகில இந்திய தேசிய சேவையில் முன்னணியில் நின்றவர் ராம். 33 கோடிமக்கள் ஒரு தனிநாட்டில் வாழ்ந்தால் அது ஒரு வல்லரசாகவே திகழும் வாய்ப்புடையது. அதன் ஜனாதிபதியாக விளங்கவல்ல திறமையும் தியாகமும் கொண்ட 'பாபுஜீ' ராம் அதிலும் பெரிதான சாதனை இயற்றியதை நாம் குறிப்பிடவேண்டும்.

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடாகிய சுதந்திர இந்தியாவின் துணைப்பிரதமராகவிருந்ததுமட்டுமல்ல, ஒருகாலம் பிரதமராகவுமே வரக்கூடிய நிலையடைந்தவரென்றால், தீண்டாமை இயக்கம், ஏழைமக்களின் நல்வாழ்வு பாரம்பரியமாக புறக்கணிக்கப்பட்டு வந்த மக்களின் முன்னேற்றம் பாரதநாட்டில் எவ்வளவு தூரம்முன்னேறியிருப்பதை உணர்த்துகின்றது.

'ஒதுக்கப்பட்ட மக்கள் என்பவர் யார்? இந்த வினவை நாம் இன்று இலங்கையில் வாழும் இலங்கைத் தமிழர், இந்திய வம்சாவளியினர் எவருக்கும் விடுப்போமானல் ''முகக்கண்ணுடியில் பார்'' என்ற விடையில் என்ன வியப்பு?

இலங்கையில் மட்டுமல்ல; மத்திய ஆபிரிக்கா, தென் ஆபிரிக்கா, மத்திய தென் அமெரிக்கா போன்ற பெருந் தேசங்களிலும் அந்நாட்டு மக்கள் ஒதுக்கப்பட்டுவருவது இன்றைய வரலாறு.

ஒரு சிலரே உண்டும் குடித்தும் களித்தும் வாழ்வதற்காகப் பிறந்தவர்கள். ஏனையோர் அவர்களின் அடிமைகளாகத் தொண்டு செய்பவர்கள் என்ற வாழ்க்கை முறை ஜனநாயகம் என்று கூசாமற் சொல்லப்படுகிறது; கொள்ளப்படுகிறது.

210-வது சுதந்திர தினத்தை அண்மையில் கோலாகலமாகக் கொண்டாடிய அமெரிக்கா கறுப்பர்களின் உரிமைக்காகவும், அடிமைத்தனத்தை அகற்றவும் ஒரு உள்நாட்டுப்போரைநடத்தி வெற்றிகண்டது. ஆனல் அது அந்தக் காலம்! இன்றைய ஏமாற்று நிலை வேதனைக்குரியது.

இன்றைய கோலாகலம் நியூயோர்க்கிலுள்ள 'சுதந்திரதேவி' என்ற சிலையில் காணப்படுகிறது உண்மை. இதற்கு நேர்மாறான அலங்கோலமே! நிக்கரகுவா ஆட்சியை எதிர்த்துப்போராடும் பிற்போக்குக் கெரில்லாக்களுக்கு நிதியும் ராணுவ உதவியும், இயலுமானல் ராணுவத் தலையீடும் நடத்தத் தயாராகிறது இன்றைய அமெரிக்க ஆட்சி, சர்வதேச பயங்கரவாதத்தை ஒழிக்கத் துடிக்கும் றீகனின் ஆட்சி.

ஆபிரிக்க மக்களின் போராட்டத்திற்கு எவ்வித ஆதரவையும் அளிக்கத் தயங்கும் அமெரிக்கா, தனது சொந்தத் தேசத்திலேயே மிகத் திறமை வாய்ந்த கறுப்பினத் தலைவர் எவரும் வெள்ளை மாளிகையில் ஜனதிபதியாக வீற்றிருக்கும் சந்தர்ப்பத்தை உருவாக்கி வருகிறதா? மாளிகையின் பெயரே இதற்கு முரண்படுகிறது.

மற்றவர்களின் உரிமைக்கு இடர் விளைக்கின்றவன் உரிமை உணர்வே இல்லாதவன் என்றல் அது மிகையாகாது. பிறர்க்கு உரிமை கொடுக்காமல் தான் மட்டும் உரிமையோடு வாழ முயல்கின்றவன் உரிமையாளன் அல்ல; கொடுங்கோலன் என்பதே அவனுக்குப் பொருந்தும் பெயர். அத்தகைய ஆட்சியில் மக்கள் மடிவதை நாம் கண்ணுரக் காண்கின்றோம்.

எங்கள் நாட்டில் அடிப்படை உரிமையைப் பற்றி எத்தனை பட்டிமன்றங்கள்; எத்தனை கருத்தரங்குகள்; இருப்பினும்; இன்று இலங்கை உயர்நீதிமன்றத்துக்கு வரும் உரிமை மீறல் வழக்குகள் எத்தனை! இவ்வித வழக்கு நடவடிக்கைகளுக்கு வசதியில்லாத மக்கள் லட்சக்கணக்கானோர் என்பதில் ஐயம் உண்டா?

சட்டத்தாலும், அரசியல் சாமர்த்தியத்தாலும் வாசாலப் பேச்சுக்களினுலும் ராஜதந்திர சுற்மாற்றுக்களாலும் ஒதுக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் ஒருபோதும் கிடைக்காது. இலங்கை அரசியலில் நாம் பெற்ற அனுபவம் இது.

உழைப்பை மட்டும் பெற்றுக்கொண்டு மக்களுடைய உரிமையைப் பறித்துக்கொண்டு, சிறுபான்மையர், வந்தேறுகுடிகள், தாழ்த்தப்பட்டவர்கள் என்றும் தீண்டத்தகாதவர்கள் என்றும் ஒதுக்கும் கொடுமையை எதிர்த்துப் போராடிய வீரன் 'பாபுஜீ' ஜெகஜீவன்ராமுக்கு ஒதுக்கப்பட்ட உலக சமூகம் தனது அஞ்சலியைச் செலுத்தக் கடமைப்பட்டது. இந்தியாவின் 33 கோடி மக்களுக்கு மட்டுமல்ல உலகனைத்திலும் புறக்கணிக்கப்பட்டு வாழும் மக்களுக்கும் இது பேரிழப்பு.

இன்று பாரதம் இப்பெரும் தலைவருக்கு அளிக்கும் கௌரவம், அன்று மாட்டின் லூதர்கிங் என்ற அமெரிக்க கறுப்பினத் தலைவருக்கு அளிக்கப்பட்டது போல் உலகில் இத்தகைய கொடியஅரசியல், சமுதாய அநீதிநிலைத்திருக்காதென்பதை வற்புறுத்துகிறது.

## ''கிராமத்தின் வளர்ச்சிக்கு கிராமசேவை அலுவலகர்களே அச்சாணியாவர்''

யாழ்ப்பாணம் புதன் ''இன்று வட பிராந்தியம் மிகமுக்கியமான பிரதேசமாக விளங்குகிறது. இங்கு இக்கட்டான சூழ்நிலை நிலவுகிறது. அதனால் சமுதாய வளர்ச்சியிலும் பல பிரச்னைகளை எதிர் நோக்க வேண்டியுள்ளது.''

யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு கே. இராமநாதர் யாழ். மாவட்ட கிராமசேவை அலுவலர்கள் சங்கத்தின் 27 வது ஆண்டு வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

யாழ்ப்பாணம் புனித பரியோவான் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு திரு கே. எஸ் சோமசுந்தரம் தலைமை வகித்தார். மேலதிக அரசாங்க அதிபர் தொடர்ந்து பேசுகையில் ''தற்போதைய சூழ்நிலைக்கேற்ப பிரச்னைகளுக்கு உடனடியாகத் தீர்வு எடுக்கப்பட வேண்டும். இவை நடை பெற்று வரும் பிரச்னைகளைக் காணும் நடவடிக்கைகளுக்கு அச்சாணியாகஉள்ளவர்கள் கிராமசேவர்களேயாவர்'' என்றார்.

''நமது நாட்டில் உள்ள 14 ஆயிரம் கிராமங்களின் சனத்தொகையில் 80 வீதமான மக்கள் வாழ்கின்றார்கள் ஒருநாட்டின் உயர்வுக்கு உறுதுணையாக இருப்பது கிராமத்தின் வளர்ச்சியே ஆகும்'' என்ற அவர், கிராமங்களின் வளர்ச்சிக்குரிய பரிபாலனங்கள் கிராமசேவையாளர்களிலேயே உள்ளது'' என்றார்.

பொதுசனத் தொடர்பு அதிகாரி திரு.த.குலசேகரம் தமது உரையில்; ''மக்கள் தமது இன்னல்களை எடுத்துக்கூறி தம்முடன் வந்து உதவும்படி கேட்கும் போது அதற்கு கிராம சேவகர்கள் மறுப்பது நல்லதல்ல. கிராமசேவகர்கள் போக முடியாதநிலை இருந்தால் அவர்கள் அதுபற்றி அரசாங்க அதிபரிடம் முறையிடலாம்'' என்றார்.

தலைமைக் காரியாலய மேலதிக அரசாங்கஅதிபர் திரு.கே. கோபாலரத்தினம் கிராமசேவையாளர் பதவியிலிருந்து ஓய்வுபெற்றுள்ள திரு.கே. பேரம்பலத்தின் சேவையைப் பாராட்டி உரை நிகழ்த்தினர்.

திரு. பேரம்பலத்திற்கு அன்பளிப்புப் பரிசினை மேலதிக அரசாங்கஅதிபர் வழங்கினர்.

வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் அறிக்கை, ஆண்டறிக்கை என்பன வாசிக்கப்பட்டன. பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. (ஐ)

## தட்டெழுத்தாளர் நேர்முகப்பரீட்சை

வவனியா, திங்கள்.

வவனியா கச்சேரி அமய தமிழ்த் தட்டெழுத்தாளர் பதவி வெற்றிடத்திற்கான நேர்முகப்பரீட்சை இம்மாதம் 22, 23ம் திகதிகளில் வவனியா கச்சேரியில் நடைபெறும்.

மேற்படி வெற்றிடத்திற்கு 55 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாகவும் விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகப் பரீட்சைக்கு வரும்படி அழைப்பு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

## உள்ளத்தூய்மையும் ஆலயச் சிறப்பும்

### தங்கம்மா உரை

யாழ்ப்பாணம், செவ்வாய்

''மக்கள் உள்ளத் தூய்மையுடன் ஆலயங்களை வழிபட்டு தொண்டாற்றினல் ஆலயம் சிறப்புற வளர்ச்சியடையும்''

இவ்வாறு பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி சென்ற மாதம் ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய ஸ்ரீ பஞ்சமுக விநாயகர் மஹா கும்பாபிஷேக விழாவில் உரையாற்றுகையில் கூறினர்.

மேலும் அவர் தம்முரையில் ஸ்ரீ பஞ்சமுக விநாயகரின் தோற்றத்தை விரிவுகக் கூறியதுடன் இவ் விநாயகரை இவ்வாலயத்தில் நிறுவுவித்த பெரியார் திரு த. தம்பிராசா, திருமதி பரிபூரணம்தம்பிராசாவையும். வாழ்த்தி அவர்கள் சமய, சமூக பணிகளைத் தொடர வேண்டிக்கொண்டார்.

இவ் விழாவின் ஆரம்பத்தில் நல்லை ஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீ சோமசுந்தரபரமாசாரிய சுவாமிகளின் ஆசியுரை இடம் பெற்றது. தொடர்ந்து திருமதி. மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம், சிவஸ்ரீசோவாகீஸ்வரக்குருக்களின் சிறப்புச் சொற்பொழிகளும், பண்ணிசைக்கச்சேரியும் இடம் பெற்றன

இறுதியில் திருப்பணிச்சபைத் தலைவர் இ. கனகசாபாதியும் வள்ளல் திரு த. தம்பிராசாவும் ஆலயத்தில் நடைபெற்ற திருப்பணிபற்றி கூறியதுடன் ஆலயநிர்வாக சபைச் செயலாளர் திரு ந துரைராசா அவர்களின் நன்றியுரையுடன் வைபவம் முடிவுற்றது.

(சிவ)

## ''விழிப்புலனற்றவர்களுக்கு அனைவரும் உதவ வேண்டும்''

சாவகச்சேரி, திங்.

'விழிப்புலனற்றவர்கள் சமுதாயத்தில் தாழ்ந்தவர்கள் அல்லர். அவர்கள் தமது வீடுகளில் அடங்கி, ஒடுங்கி இருந்த காலம் போய விட்டது. இன்றைய காலகட்டத்தில் விழிப்புலனற்றவர்கள் பல் வேறுவிதமான கைத்தொழில் முயற்சிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு தமக்கும் சமுதாயத்திற்கும் பயன்தரும் காரியங்களில் செயல்பட்டுவருகின்றனர். எனவே விழிப்புலனற்றவர்களின் வளர்ச்சிக்கு விழிப்புலன்கள் உள்ளோர் பெரிதும் உதவுதல் வேண்டும்'

இவ்வாறு ஒன்றிணைக்கப்பட்ட பிரஜைகள் குழுக்களின் தலைவரான சட்டத்தரணி திரு. இ. பாலசுப்பிரமணியம் கைதடி நவீல்ட் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற யாழ். மாவட்ட விழிப்புலனற்றோர் சங்கத்தின் 10-வது ஆண்டு விழாவில் பிரதம விருந்தினராகப் பங்கு கொண்டு சிறப்புரையாற்றும் போது தெரிவித்தார்.

சங்கத்தின் தலைவர் திரு. கே. விஜயராஜசிங்கத்தின் தலைமையில் நடைபெற்ற ஆண்டு விழாவின் போது தலைவர் யாழ் மாவட்டவிழிப்புலனற்றோர் சங்கத்தின் கடந்த காலச் செயல்பாடுகள் பற்றி விபரித்தார்.

## தென்மராட்சி பாதயாத்திரை

உலகிலுள்ள மனிதருக்கெல்லாம் ஒரு பெயருண்டு. அது தான் திருவடி யாத்திரைக்காரர் என்பது. அறிந்தோ அறியாமலோ இறைவனுடைய திருவடியை நோக்கியே நாம் எல்லோரும் யாத்திரைசெய்து கொண்டிருக்கிறோம். ஒருசிலர் குறிக்கோள் இல்லாமலே வாழ்க்கை நடத்துவதைப் பார்க்கிறோம். இவர்களைப் பார்த்து அப்பர் சுவாமிகள் ''குறிக்கோளிலாது கெட்டேன்'' என்கிறார். இது போலவே திருவடி நினைவோடு வாழ்க்கையை யாத்திரையாக நடத்துபவர் செதியில் இறைவன் திருவடியை அடைந்து இன்புறுவர்.

திருத்தல யாத்திரை செய்பவர்கள் பற்பல சத்திரங்கள், மடங்கள் அம்பலங்களிற் தங்கிச் செல்வது போல, திருவடி யாத்திரைக்காரராகிய நாமும் பல பிறவிகளாகிய அம்பலங்களில் தங்கித்தங்கி யாத்திரை செய்கின்றோம். குறிக்கோளோடு யாத்திரை செய்பவர் அவர்களுடைய முயற்சிக்கும் ஆர்வத்துக்கும் தக மிகக்கெதியில் இறைவனுடைய திருவடியை அடைவர்.

சைவசமயாசாரியர்கள் திருத்தலந்தோறும் பாதசாரிகளாகவே யாத்திரை செய்து பரமனைப் பக்திசெய்து முத்தி அடைந்தனர். அவர்களுடைய வருகையால் திருத்தலங்கள் ஒளிபெற்றன. அதாவது அருள் சுரந்தன மக்களும் துன்பமின்றித் துயரின்றி வாழ்ந்தனர்.

''அரன்நாமமே சூழ்க, வையகமுந்துயர் தீர்கவே'' என்று திருஞானசம்பந்தர் குறிப்பிட்டவாறு தென்மராட்சி எங்கும் சிவநாமம் ஒலிக்கவும் அதனல் மக்களுடைய துயர் நீங்கி அமைது பெறவும் மாணிக்கவாசகருடைய குருபூசைத்தினமாகிய 11-7 86 வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு சாவகச்சேரி வடக்கைச்சேர்ந்த செருக்கல் பிள்ளையார் கோயிலில் இருந்து ஆரம்பமாகிறது. மேற்படி பாதயாத்திரை 13 நாட்களுக்குத் தொடர்ந்து நடைபெற்று 23-7-86 புதன்கிழமை சச்சாய் வீதியைச் சேர்ந்த முருகன் ஆலயத்தில் நிறைவுபெறுகின்றது. இப்பாதயாத்திரை திருவடி யாத்திரைக்கு ஒரு முன்னேடியாகும். இப்படி சந்தர்ப்பம் எப்போதும் கிடைப்பதில்லை. இவ்வரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எல்லாரையும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

—'பாதயாத்திரைக்குழு'

## மரம் நாட்டு விழா

பண்டத்தரிப்பு, திங்கள்

பண்டத்தரிப்பு திருச்சபை தேவாலயத்தில் மரம் நாட்டு விழாவும், கருத்தரங்கும் இன்று செல்வாய்க்கிழமை முற்பகல் நடைபெறவுள்ளது. வண. சாம் தம்பு தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில் பிரதம அதிதியாக தொழிலதிபர் திரு க. கனகராசா கலந்துகொண்டு மரக்கன்றுகளை அன்பளிப்புச் செய்வார். யாழ் மாவட்ட உதவி காணி ஆணையாளர் திருமதி இ. இராமச்சந்திரன், யாழ். திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திருமதி சரோஜினி கனேந்திரன், யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. ச, கிருஷ்ணபிள்ளை ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுவர்.

## காணவில்லை

கொட்டடக்கலையைச் சேர்ந்த தங்கவேலு சரோஜா, லதா, ஆகிய 15 வயதிற்குட்பட்ட வீட்டு உதவியாளர்களான இரு பெண் பிள்ளைகளை 3-7-86 முதல் காணவில்லை இவர்கள் வீட்டிலுள்ள நகை, பணம் ஆகியவற்றையும் களவாடியுள்ளனர். தகவல் தருவோருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும் தொடர்பு கொள்ள வேண்டிய இடம், 71/9, சீனியர் லேன், கலட்டி, யாழ்ப்பாணம். (C 3362)

## மறைந்த ஓராண்டு நினைவு

திருமதி
மேரி யோசேப்பின்
அந்தனிசியார்

மறைவு: 8-7 1985
நினைவு: 8-7-1986

இறைவனின் திருநிழலில் அவர் சந்தோஷமாக இளைப்பாறக் கட்டளையிட்டருளும் சுவாமி ஆமென்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பூட்டப்பிள்ளைகள்,
சில்லாலை.

(C 3353)

## 20-ம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. மாப்பாணர்
பொன்னையா

[ஓய்வு பெற்ற மலாயன் பென்ஷனர்]

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்த நீங்கள் 20-வது ஆண்டுகள் எம்மை விட்டுப்பிரிந்தாலும் தங்கள் திருஉருவமும், நினைவும் எமது உள்ளத்தில் எப்பொழுதும் நீங்காத இடத்தைப பெற்றுள்ளது.

தங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

தங்கள் பிரிவால் துயருறும் அன்புக் குடும்பத்தினர்.

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

(C 3351)


**லிடோ**

இன்று முதல்
காலை 10-30, 2-30, 6-30
பாக்கியராஜ்-சரிதா
நடித்த
**மௌனகீதங்கள்**
(கலர் - புதிய பிரதி)



**வெலிங்டன்**

10-30, 2-30, 4-30, 6-30 P-M
முதல் முறையாக யாழ் நகரில் காண்பிக்கப்படுகிறது.

**VENOM**
Action - Thrill


## ஆசிரியர் கருத்தரங்கு

வவுனியா புதன்

செட்டிகுளம் வட்டார பாடசாலைகளில் 5 ம் ஆண்டில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு 4 நாள் கருத்தரங்கு அண்மையில் பூவரசங்குளம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

### வாகனேரி----

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்இரு இளைஞர்களும்ஒட்டுமாவடிச் சந்தியில் நின்ற பொழுதே கைது செய்யப்பட்டிருந்தனர்.

இருவரது சடலங்களையும் பிரேத பரிசோதனை செய்த டாக்டர் மகேந்திரராசா துப்பாக்கிச் சூடுகளாலும் தீயிட்டு எரிக்கப்பட்டதாலும் மரணம் ஏற்பட்டதாகத் தெரிவித்தார். சடலங்கள் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. [மா]

### தமிழர், முஸ்லிம்---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பதியிடம் தாம் வலியுறுத்தியிருப்பதாகவும்குறிப்பிட்டார்.

இலங்கை இனப்பிரச்னைத் தீர்வுக்கு தற்போது ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டிருப்பதாவும், கிழக்குப்பகுதியில் தற்போதுள்ள எல்லைகளை மாற்றாமலேயே தமிழர்களுக்கு தனி மாநிலம் ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்க முடியுமென்றும், இது சம்பந்தமான புரிந்துரைகளை தனது கட்சியான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இலங்கை அரசுக்கு அனுப்பி வைத்திருப்பதாகவும் அமைச்சர் தொண்டமான் கூறியிருப்பதாகப் பி. ரி. ஐ. செய்தி வெளியிட்டுள்ளது. [ய-செ]

### காயங்கேணி..:

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சார்ஜன்ட் உட்பட 5 பொலிசார் இருந்த ஜீப்வண்டியே கண்ணிவெடியில் சிக்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை குண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட காயாங்கேணி பாலத்திருத்த வேலைக்குச் சென்ற இரு உத்தியோகத்தர்கள் நேற்று ஆயுதப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (மா)

### ஜூலை 15...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இதனைதொடர்ந்து அந்த யோசனைகள் சிலவற்றில் காணப்பட்ட முரண்பாடுகளை த. வி கூ. சுட்டிக்காட்டியதுடன் அவைகுறித்து இலங்கை அரசின் தெளிவான விளக்கங்கள் தேவை எனவும் தெரிவித்தது.

இதேவேளை த வி கூ கோரிய விளக்கங்களுக்கான இலங்கை அரசின் பதில் இந்திய அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக நேற்று மாலை பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

எனவே இலங்கை அரசாங்கத்தின் புதிய விளக்கத்தின் அடிப்படையிலேயேஎதிர்வரும் 15-ந் திகதி கொழும்பில் இடம் பெறவுள்ள அரசியல் கட்சிகளின் மகாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணிபங்குபற்றுவது குறித்து முடிவு எடுக்கப்படும் என்று கூட்டணி செயலதிபர் திரு. அ அமிர்தலிங்கம் நேற்றுத் தெரிவித்ததாகத் ராய்ட்டர் செய்தி தெரிவித்துள்ளது.


யாழ்ப்பாணம்
ஐக்கிய வியாபாரச் சங்கம் (வ.ரை)

புதிய கிளை **திறப்பு விழா**

**09-7-86 புதன் காலை 9 மணி**

நல்லை ஆதினத்துக்கு முன்னுல்
கந்தனயலில் கடைதிறக்கிறோம்.

யாவரும் வருக

- ✶ வழிபாட்டுப் பொருட்கள்
- ✶ அலுமினியம் எவர் சில்வர் பாத்திரங்கள்
- ✶ பல சரக்கு
- ★ அழகு சாதனப் பொருட்கள்

இன்னும் பல

நியாய விலை! சரியான அளவு!
தரமானபொருட்கள்!

நிர்வாக இயக்குனர்

(A 775)



## பிரயாண ஒழுங்கு

✶ டென்மார்க் ✶ கனடா

ஆகிய நாடுகளுக்கான ஒழுங்குகளை ஏற்பாடு செய்வதற்கும்
பாஸ்போட், பொலிஸ், விசா, விமானச் சீட்டுகள் குறைந்த செலவிலும் வெகுவிரைவிலும் செய்து கொள்வதற்கும்
மற்றும்
★ மலேசியா, ★ சிங்கப்பூர், ★ சவூதிஅரேபியா போன்ற நாடுகளுக்கு உடனடியாக தொழிலாளர்கள் தேவைப்படுவதால் 10-9-1986 க்கு முன்னர் பாஸ்போட்டுடன் நேரடியாக வரவும்.

தொடர்பு கொள்ள வேண்டிய இடம்:

**MAN POWER
MULTI SERVICES
and Travel Consultant**
533, Stanley Road, Jaffna.

[C-3352]


## புதிய யோசனைகள்: கருத்துவெளியிட சு. கவுக்கு கால அவகாசம்

(கொழும்பு திங்கள். இலங்கை இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வுகாண அரசினுல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆலோசனைகள் பற்றிய தமது கருத்தைத் தெரிவிப்பதற்காக சுதந்திர கட்சியினருக்கு ஜனுதிபதி மேலும்கால அவகாசம் வழங்கியுள்ளார்.

### எம். பிக்களுக்கு ஜனுதிபதி விளக்கம்

இதனிடையே இப்புதிய ஆலோசனைகள் குறித்து அரசாங்க எம். பீக்களுக்கு நாளை செவ்வாய் நடைபெறவுள்ள அரசாங்க பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் வைத்து ஜனுதிபதி விளக்கமளிப்பார்.

பின்னர், அரச எம் பிக்களை மாகாண ரீதியாக 4 குழுக்களாக பிரித்து தொடர்ந்து 4 நாட்களுக்கு ஜனுதிபதி அவர்களுடன் இவ்வாலோசனைகள் பற்றிகலந்துரையாடல் நடத்துவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ய-செ)

### மட்டு. வவு...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

கிறது.

நேற்றுப் பிற்பகல் 5 மணி தொடக்கம் இரவு சுமார் 8-30 மணிவரை இம்மோதல் இடம் பெற்றது.

கல்லடி முகாமிலிருந்து சுமார் 50 அதிரடிப்படையினர் 2 ட்ரக், ஒரு ஜீப், ஒரு கவச வண்டி சகிதம வவுணதீவுப் பாலம் பக்கமாகத் தேடுதல் வேட்டைக்குச் சென்றனர். இவர் போராளிகள் சுற்றிவளைத்து தாக்குதல் மேற் கொண்டனர்.

இச் சம்பவத்தின் போது வெடித்த குண்டுகள் மட்டக்களப்பு நகரையே அதிர வைத்தன.

தொடர்ந்துமட்டக்களப்புநகரிலிருந்து 300 க்கும் மேற்பட்ட அதிரடிப்படையினரும் ஊர்காவல்படையினரும் ஸ்தலத்துக்கு விரைந்தனர். அத்துடன் ஹெலிகப்டர், குண்டு வீச்சு விமானங்களும் படையினருக்கு உதவியாக தாக்குதல் நடத்தின.

இரவு 8-30 மணியளவில் இப்பகுதியிலிருந்து எதுவித சத்தங்களும் கேட்கவில்லை.

இம்மோதலின்போதுபலத்த உயிர்ச் சேதம் ஏற்பட்டுள்ள போதிலும் விபரம் எதுவும் இன்னமும் தெரியவில்லை.

சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச்சென்ற படையினர் இ செய்தி அச்சுக்குப்போகும் வரை முகாம்களுக்குத் திரும்பவில்லை. [மா]

## கிராமிய உழைப்பாளர் சங்கம்

யாழ்ப்பாணம், செவ்

கிராமிய உழைப்பாளர் சங்கத்தின் கிளைகள் யாழ் குடாநாட்டின் சகல கிராமங்களிலும் துரிதமாக அமைக்கப்பட்டு வருகின்றன.

அராலி வடக்கு மயிலியப் புலத்தில் அமைக்கப்பட்ட கிராமிய உழைப்பாளர் சங்கக் கிளைக்குச் செயலாளராகத் திரு. எஸ். ரவீந்திரராசா தெரிவு செய்யப்பட்டார். [ஐ]


## திறப்பு விழா

உள்நாட்டு,
வெளிநாட்டு
தொலைபேசி
(TELEPHONE)
தொலைத் தொடர்பு
(TELEX)
சேவை

09-07-86
புதன்கிழமை
காலை 6 மணியளவில்
சிவத்தமிழ் செல்வி
தங்கம்மா
அப்பாக்குட்டி
அவர்களால்
ஆரம்பித்து
வைக்கப்படும்.




இன்ரநஷனல்
கொமினிக்கேஷன்
கொம்பிளெக்ஸ்
International Communication
Complex,
282 A, யாழ்ப்பாண வீதி,
மானிப்பாய்.

(C-3363)

வட இல. மருததுவக கல்லூரி

# புதிய உடற்கூறியல் கட்டிடத்துக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம், செவ்வாய்

''வட இலங்கை மருத்துவக் கல்லூரி தமிழ் மக்களுக்கு ஓர் வரப்பிரசாதம். இக் கல்லூரி பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதியிருந்தும் அனுமதி கிடைக்காத மாணவரின் கல்விக்கு ஆக்கபூர்வமான சேவைகள் செய்யும் ''

இவ்வாறு மூளாயில் அமைந்திருக்கும் வட இலங்கை மருத்துவக் கல்லூரி புதிய உடற்கூறியல் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு வைபவம் சென்றவாரம் நடைபெற்றபோது டாக்டர். சேவியர் தமது ஆரம்ப உரையில் தெரிவித்தார்.

இவ் வைபவத்தில் உரையாற்றிய கல்லூரியின் நிர்வாகச் செயலாளர் டாக்டர். திரு. பிலிப் தனதுரையில் ''தமிழ் மக்களுக்குஇக் கல்லூரி மூலம் சிறந்த சேவையை மறியுள்ளோம். இக் கல்லூரி வளர்ச்சிக்கு மக்களின் முழு ஆதரவும் எமக்குத் தேவை என்று கூறினர். இதன்மூலம் அதிகளவு மக்கள் பயனடையவுள்ளதால் இப் புதிய கட்டடத்தை விரைவில் அமைத்துத் தருமாறு கட்டிட ஒப்பந்தகாரரை வேண்டிக் கொண்டார்.

இப் புதிய கட்டடத்திற்கான அடிக்கல்லை டாக்டர். திரு. சேவியர், டாக்டர். திரு. சிவானந்தராஜா, மூளாய் வைத்தியசாலை சபைத் தலைவர், திரு. சிவகுரு மற்றும் அங்கு பணிபுரிவோரும் நாட்டி வைத்தனர். (சிவ)

## அடக்கமாக சமூகப்பணி ஆற்றியவர்

தனது ஆசிரிய சேவையின் பெரும்பகுதியை மலையகமக்களுக்கு வழங்கியும் பின்னர் தனது சொந்தமாவட்டத்தின் பல பகுதிகளில் கடமையாற்றியும் பாடசாலைச் சிறுவர்கள் மத்தியில் மட்டுமல்ல வளர்ந்தவர்களுக்கிடையிலும் கூட தனக்கென ஒருநிலையான இடத்தைப் பெற்றுக் கொண்ட அமரர் ச. செபஸ்தியாம்பிள்ளை எம்மை விட்டுப்பிரிந்துவிட்டார்.

அவர் வாழ்ந்த நாட்கள் அவரது மாணவர்களுக்கும் அவ்வப்பகுதி கிராமங்களுக்கும் ஒரு பொற்காலமாகும். மலையகத்தில் கடமையாற்றிய பின் தனது சொந்த மாவட்டத்தில் குறிப்பாக அவர் பிறந்த மட்டுவில் கிராமத்திலும் மற்றும் கொடிகாமம், பூனகரி உட்பட பலபகுதிகளிலும் அவரின் சேவையை நினைத்து மக்கள் மகிழ்ச்சியடைந்தார்கள். அது மட்டுமல்ல கலைத்துறையின் பல அம்சங்களிலும்அவரதுதிறமை வெளிப்பட்டது.

இறுதிவரை மிகஅடக்கமாக அமைதியாக இறைநம்பிக்கையுடன் சமூகப்பணி செய்து மறைந்த அவரை அவரது அன்புக்குரியவர்களோடு இணைந்து நாமும்நினைவு கூர்வோம்.

— ஒரு மாணவன்

## 'மனவடக்கம் உடலாரோக்கியத்தின் அத்தியாவசியம்'

வட்டுகோட்டை, திங்கள்

''கல்வியைப் பெறுவதற்கு ஆரோக்கியமான உடல் நிலையோடு நிறைந்த மனவடக்கம் பொறுமை என்பனவும் வேண்டியிருக்கிறது. இதனாலே தான் ஒரு கல்லூரியின் உண்மையான வளர்ச்சிக்கு விளையாட்டு மைதானம் வலியுறுத்தப்படுகிறது. ஒரு விளையாட்டு மைதானம் இப் பாடசாலைக்கு இல்லாதது ஒரு குறையாகின்றது. இதனைப்போக்க நாமெல்லோரும் நடவடிக்கை எடுக்க வேண்டும் ''


இவ்வாறு திருநாவுக்கரசு வித்தியாசாலை மாணவர்களிடையே நடந்த மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கொத்தணி அதிகாரி நா வேலுப்பிள்ளை கருத்துரை வழங்குகையில்கூறினர்.

## கூட்டம்

யாழ்ப்பாணம், செவ்.

அண்மையில் மறைந்த தமிழ் அகதிகள் புனர் வாழ்வுக் கழகத்தின் தலைவரான கா. விசுவலிங்கத்தின் சேவையை நினைவு கூருமுகமாக ஏழாலை பிரஜைகள் குழுவினர் அண்மையில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைக் கூட்டமொன்றை நடத்தினர்.

இக் கூட்டத்தில் பலர் கருத்துரை வழங்கியதுடன் அவரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் செய்தியொன்றும் அவரது குடும்பத்தினருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.



## இணுவிலூரில் சிறந்தவொரு திருமுறைப் பாவலர்

இணுவில் கந்தசாமி கோவிலில் பிரமோற்சவத்தில்வசந்த மண்டபப் பூஜைநடைபெறுகின்றது. சோடசோபசாரதீபாலங்காரமும் சதுர்வேத பாராயணமும் முடிவடைந்ததும் பெரியார் ஒருவர் டஞ்சபுராணத்தைப் பக்தி நெறியுடன் சொல்லும் திருப்பாட்டின் பொருளுணர்ந்து பண்ணிசைக்குரிய இலக்கண மரபில் நின்று பக்தர்கள்மெய்சிலிர்க்கப்பாடுகின்றார். பஞ்சபுராணம் பாடி முடிப்பதற்கு அரைமணி நேரமா? என்று ஒரு சிறு குறையும் அலுத்துக் கொள்கிறது. நம் நாட்டில் தேவாரம் முதலிய திருமுறைகள் ''சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து'' பண்ணியல்பாகப் பத்திமையாலே பாடி'' ''காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார்'' இன்று மில அருகி வருதல் கண்கூடு இத்தகைய உயர்ந்த உன்னதமான சக்தி வாய்ந்த திருமுறைத் திருப்பாடல்களை பண்முறை இலக்கண மரபுகளுக்கமைய சென்ற 35 ஆண்டுகளுக்கு மேலாக இணுவில் கந்தசுவாமி கோவிலில் பாடி வருகிறார். அவ்வூர்ப் பெருமகனும் பாவல்லருமான திரு பெரியதம்பி கந்தையா அவர்கள்

திரு. கந்தையா அவர்கட்கு இப்போது வயது 75. கம்பீரமானதோற்றம் கணீரென்ற குரல் இன்னும் இராக தாளங்களின் கட்டுக்கோப்பில் சேர்ந்த இசைமாரி, சிவநெறிப் பொலிவு, சைவாசாரம் முதலியவற்றுடன் கைத்தாளத்துடன் சுருதிசேர்த்து சிஷ்யர்களுடன் வாராந்த பஜனை செய்யும் பாங்கு இங்கு வியத்தகு காட்சியாகத்தான் இருக்கிறது. இணுவில் கந்தசாமி கோவில் மகோற்சவங்களிலும் மற்றும் கந்தஷஷ்டி நவராத்திரி திருவெம்பாவை ஆதியாம் புனித தினங்களிலும் இப்பெரியாருடைய அருளமுதம் பொலிவுறறுள்ளதை சிவத்தால் நினைப்பதை உணரலாம்.

சீரிய பண்பும், கல்வித்கைமையும், செல்வச்சிறப்பும் கொண்டுள்ள திரு. பெரியதம்பி கந்தையா அவர்கள் இளம் பராயத்திலே இசையிலும் திருமுறைப் பஜனைகளிலும் அதிக நாட்டம்கொண்டிருந்தார். பண்டுதொட்டே இக்கிராமமக்கள் பலர் இசைக்கலையையும், மேடை நாடகத்தையும், நாட்டுப்பாடல்களையும் ஊக்குவித்து பேணிக்காத்து வந்தார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது இவ்வகையில், திரு கந்தையாஅவர்கள் சாவித்திரி சத்தியவான் நந்தனார், அரிச்சந்திரன் முதலிய நாட்களில் பிரதம பாகமேற்று நடித்துள்ளார்.

திரு. கந்தையா அவர்களின் பண்ணிசையைப் போற்றி, பாராட்டி, சிறப்பிக்க ஒரு பாராட்டு விழாவும் கௌரவ பட்டமளிப்பு விழாவும் 9 - 7 - 86 புதன்கிழமைக்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இவ்விழா தெய்வத்தமிழ் இசை விழாவாகவே கருதப்பட வேண்டியதொன்றாகும்

— சி. முத்துக்குமாரன்

## 'எழுத்தாளர்கள் சன்மானம் இல்லாமல் எழுதக்கூடாது''

யாழ்ப்பாணம், செவ்.

எழுத்தாளர்களாகிய நாம் வெறும் இலக்கியங்களுடன் மாத்திரம் தொடர்புகொண்டிருப்பதில் பிரயோசனமில்லை. எமக்கு அப்பால் பல நல்ல மனம் படைத்த மனிதர்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் பட்டயக்கணக்காளர் சோமசுந்தரப்பிள்ளை போன்ற இரக்கமும் தயாளகுணமும்கொண்டவர்கள் எமக்கு நண்பர்களாக இருப்பதையிட்டு நாம் பெருமைபட்டுகின்றோம். பல்கலைக்கழக அறிஞர்களும் பல்கலைக்கழகம் சாராத எழுத்தாளர்களும் வெளிஉலகப் பிரமுகர்களும் ஒருவருக்கொருவர் தொடர்புகளை வளர்த்துக்கொண்டு வரப்போகும் புதிய சமுதாயத்திற்காகப் பாடுபடமுன்வரவேண்டும்''

இவ்வாறு மல்லிகை ஆசிரியர் திரு. டொமினிக் ஜீவா உலக சாதனையாளர் பட்டியலில் இடம்பெற்ற பட்டயக் கணக்காளர் திரு. அ. சோமசுந்தரம்பிள்ளைக்கு மல்லிகை அலுவலகத்தில் நடாத்திய தேநீர் விருந்துபசார வைபவத்தின்போது பேசுகையில் கூறினார்.

திரு. சோமசுந்தரம்பிள்ளைக்கு கலாநிதி சி. மௌனகுரு மலர்மாலை சூட்டி கௌரவித்து பேசுகையில், 'பல நல்ல காரியங்களை திரைமறைவில் செய்துவரும் இப் பெரியாரின் தொண்டு போற்றத்தக்கது' என்றார்.

திருவாளர்கள் ப. ரத்ன சபாபதி ஐயர், நா. சோமகாந்தன், நெல்லை க. பேரன் ஆகியோரும் பாராட்டுரைகளை வழங்கினர். பட்டயக் கணக்காளர் திரு. அ. சோமசுந்தரப்பிள்ளை பேசுகையில் '' மூத்தாளர்கள் சன்மானம் இல்லாமல் எதையும் எழுதக் கூடாது. நாம் செய்யும் செயல்களில் இலாபநோக்கு இருக்க வேண்டும். கிடைக்கும் லாபத்தை வேறு நல்ல வழிகளில் பயன்படுத்தலாம். மனித உணர்ச்சிகளை ஊக்குவிக்கும் வகையில் எழுதாளன் எழுதுவதாற்றான் நாம் உணர்ச்சிகொண்டு ஏழைகளுக்கும் அனாதைகளுக்கும் உதவமுடிகிறது. எனது இளமைக்காலத்தில் கத்தோலிக்க குருமார்தான் எனக்கு பண்பைப் போதித்தார்கள். பிஷப் எமிலியானுஸ்பிள்ளை என்னுடன் நட்பாக இருந்தார். சிறுவயதுமுதல் பல நல்ல உள்ளங்களுடன் பழகியதனால் இன்றும் நன்மைசெய்யும் விருப்புடன் இருக்கிறேன். சூழல்தான் மனிதனை மாற்றி அமைக்கிறது.

இவ்வைபவத்தில் திருவாளர்கள் சபா ஜெயராசா, சோ. ஜெயராசா, சோ. கிரஷ்ணராசா, புதுவை இரத்தினதுரை, ச. பத்மநாதன், மனோகரபூபதி ஆகியோர் உட்பட பல எழுத்தாளர்களும் பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

## ''பொருட்காட்சிபாடசாலையின் உயர்வைக் காட்டுகிறது''

யாழ்பாணம், செவ்

''கற்றுக்கொள்வதில் சிறிய அளவே மனதில் நிலைத்துக் கொள்வது. ஆகையால் மாணவர் இதனை உணர்ந்து அதிகம் கற்றுக் காள்ள வேண்டும். படித்தலுக்கும் படிப்பித்தலுக்கும் உபகரணங்கள் மிகவும் அவசியமானவை. ஆசிரியர், மாணவர் தமது திறன்களை வெளிக்கொணரவும் பகிர்ந்துகொள்ளவும் இப் பொருட்காட்சி நல்ல சந்தர்ப்பத்தை அளித்துள்ளது. உள்ளூர் வளங்களை உபயோகித்து உபகரணங்களை ஆக்கிக்கொள்வது விரும்பத்தக்கது''.

இவ்வாறு கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயத்தில் நடைபெற்ற கல்விப் பொருட்காட்சியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட விஞ்ஞானவட்டாரக் கல்வி அதிகாரி திரு. பி எஸ் சர்மா பொருட்காட்சியைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

கோப்பாய் கொத்தணிப் பாடசாலைகள் அதிபர் திரு. பூ. க. இராசரத்தினம் சிறப்பு விருந்தினராகக் கலந்து மங்கலவிளக்கை ஏற்றிவைத்துப் பேசுகையில், பொருட்காட்சி ஒருவரின் தனி முயற்சியல்ல, இது ஆசிரியர் மாணவர் அனைவரதும் விடாமுயற்சியாகும். இம்முயற்சி பாடசாலையின் உயர்வை தெரிவிக்கின்றது'' எனக் கூறினர்:

பாடசாலை அதிபர் திரு.மு.

(7ம் பக்கம் பார்க்க)

## நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், செவ்.

நாவாந்துறை தெற்கு டனிஸ் நிகிலஸ் இணக்கசபை உறுப்பினர்களாக, பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு ச. பத்தலோமை, செயலாளர் திரு ச. மரியதாஸ், பொருளாளர் திரு. வி. கனகராசா, உப தலைவர் திரு. அ. சத்தியசீலன், உப செயலாளர் திரு. எம். ரி. இளங்கோ. 9 பேர் நிர்வாக உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.


பிரயாண ஒழுங்கு

✶ டென்மார்க் ✶ கனடா

ஆகிய நாடுகளுக்கு செல்வதற்கான ஏற்பாடுகளை செய்துகொள்வதற்கும்

வெளிநாட்டுப் பயணங்களிற்கான பாஸ்போட், விசா, விமானச் சீட்டுக்கள் போன்றனவற்றை குறைந்த செலவிலும் வெகுவிரைவிலும் செய்துகொள்வதற்கு நீங்கள் தொடர்புகொள்ளவேண்டிய இடம்:

லிப்ருஸ் லிமிற்றெட்

R. G. கட்டடம், இல.70, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

No: 94 1/7, York Street, York Building, Colombo - 1

மற்றும்

இத்தாலி, பிரான்ஸ், மேற்கு ஜேர்மனி, சுவிஸ்.

ஆகிய நாடுகளுக்கு எங்களது முகவர் 18ம் திகதி உங்களைக்கூட்டிசெல்ல உள்ளார்.

பாஸ்போட், முற்பணம் தந்தவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.

[A-769]



பிரயாண ஒழுங்குகள்

✶ கனடா ✶ ஜேர்மனி

✶ பிரான்ஸ் ✶ டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்

மற்றும்

பாஸ்போட், பொன்ட் (BOND), விஸா, ரிக்கற் ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.

டென்மார்க்

கொழும்பிலிருந்து நேரடிப் பயண ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதால் எம்முடன் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

INTERSUN GROUP,

சின்னத்தம்பி அவெனியு, (மகளிர் கல்லூரி அருகாமை), மானிப்பாய்.

[A 729]

## யாழ். மாவட்ட உதைபந்தாட்டப் போட்டியில

# ‘பொற்பதி’ கழகம் சாம்பியனுகத் தெரிவு

யாழ்ப்பாணம், செவ்.

யாழ். மாவட்ட உதைபந்தாட்’_ச் சாம்பியனுக, கொக்குவில் ‘பொற்பதி’ ஐக்கிய விளையாட்டுக் கழகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ். ‘ரோட்டறியன்’ கழகத்தின் சார்பில், யாழ். உதைபந்தாட்ட லீக், யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே, ‘7-வீரர்’ பங்குபற்றும் ‘நொக்கவுட்’ உதைபந்தாட்டப் போட்டியை நடாத்தியது.

அண்மையில் மண்டைதீவில் கொலையுண்ட மீனவர்களில் மூவர் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் சழகத்தின் வீரர்கள் ஆவார்கள் இவ்விளையாட்டு வீரர்சளுக்கு மேற்படிப் போட்டியின் ஆரம்பத்தில் இரண்டு நிமிட அஞ்சலி செலுத்தப்பட்டது.

முதலில், யாழ். உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் சுழகங்களிடையே நடாத்தப்பட்ட போட்டியில் ‘பொற்பதி’ ஐக்கிய கழகம் சாம்பியனுகவும், நாவாந்துறை சென் நீக்கிலஸ் சழகம் இரண்டாவதாகவும் தெரிவு செய்யப்பட்டன.

இதைத் தொடர்ந்து, பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் சாம்பியன் கோஷ்டிகளான வல்வை ‘புளூஸ்’ கழகமும், வதிரி ‘பொம்பஸ்’ கழகமும், யாழ்ப்பாணச் சாம்பியன் கோஷ்டிகளுடன் மோதின. இம்மோதலில் சென். நீக்கிலஸ் கழகம் - வல்வை புளூஸ் கழகத்தையும், ‘பொற்பதி’ கழகம் ‘பொம்பஸ்’கழகத்தையும் தோற்சடிசது, யாழ். மாவட்ட சாம்பியன் போட்டிக்குத் தெரிவாகின.

இச் சாம்பியன் மோதலில் ‘பொற்பதி’ ஐக்கிய கழகம் 1—0 கோலால் வெற்றிபெற்று யாழ். மாவட்டச் சாம்பியனுகத் தெரிவு செய்யப்பட்டது.

சாம்பியன் மோதலுக்கு, ரோட்டறிக் கழகத் தலைவர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இப்போட்டிகள் யாவும் பாஷையூர் சென். அன்ரனிஸ் கழக மைதானத்தில் நடைபெற்றது. (வி)

# இன்றைய பலன்

மாசம்—ஆனி
திகதி—24 (1986-7-8)
கிழமை—செவ்வாய்
திதி—பிரதமை பி ப. வரை
நக்ஷத்திரம் — புனர் பூசம் மு. ப. வரை.

மேடம்: விருந்தினர்களின் வருகை மகிழ்ச்சியைத்தரும். நீண்ட நாள்பிணக்கு நிவர்த்தியாகும். தொழில்விடயததிற்குப் நல்ல ந'ள்

இடபம்: சிலருக்குப் புதிதாகத் தொழில் கிடைக்கும். சகோதரபாசம் தலைதூக்கி நிற்கும். கைத்தொழில் விருத்திக்கும் இடமுண் .

மிதுனம்: தொழில் விடயத்தில் அதிக கவனம் செலுத்தவும் நண்பர்சளின் சகவாசத்தால் சிக்கல்களின் மத்தியில் மாடடிக் கொள்ள நேரிடும். இன்று நடுநிலைமை நன்று

கடகம்: குமுறும் நெஞ்சத்துடன் நாளைககடத்துவீர்கள வாழ்க்கையில் சோர்வுக்கு இடமுண்டு. சிறிய விஷபயத்திற்கும் இடமேற்படும்.

சிங்கம்: உடம்பை அலட்டிக் கொள்ளாமலேயே உயர்வுக்கு வழி காண்பீர்கள், மேலிடத்து உறவு உற்சாகத்தை ஏளிககும் பெரியவர்களின் ஆசியும் உண்டு.

கன்னி: போட்டி விவகாரங்களில் ஈடுபடுவீர்கள் சிலருக்குப் புதிதாசவும் தொழில் கிடைக்கும். அரசாங்க ஊழியராயின் ஆதரவிற்கிடமுண்டு.

துலாம்: மாதுருவழி ஆதரவிற்கும் இடமுண்டு. நண்பர்கள் உங்களை உற்சாகப்படுத்துவார்கள். புதிய முயற்சிகள் இன்று கைகூடும்

விருச்சிகம்: பொதுவாக வாழ்க்கையில் நிம்மதி கிடைச்கும். வீட்டிலும் புத்திரர் மகிழ்ச்சியடைவர். தொழிலும் வெற்றியுண்டு.

தனுசு: முக்கியமான காரியங்களை இன்று பின்போடவும் உள் வீட்டிலேயே உளவுவேலை டெறும்

மகரம்: அன்பின் பிணைப்பு உங்களைப் பரவசப்படுத்தும் காதல் விவகாரம் தலைதூக்கும், சிலருக்கு பொது சனத்தலைமைக்கும் இடம் உண்டு

கும்பம்: ஏக்கத்தின் சாயல் தாக்கும் எதிர்பாராதவகையில் சிக்கல்சளில் மாட்டிக் கொள்ள நேரிடும். விடத்திற்கும் இடமேற்படும், அவதானம் வேண்டும்

மீனம்: தந்தைவழிப் பெருமைக்கும் தாராளமாக இடமுண்டு. நீண்ட நாள் சனவு நனவாகும். பெரிவர்களின் ஆதரவும் உண்டு.

திருமலை ரவீந்திரன்

## “கண்காட்சிகளை உருவாக்குவதனுல் நல்ல மனப்பாங்கு உருவாகிறது”

யாழ்ப்பாணம், செவ்வாய்

“யாழ் மாவட்டத்தில் கல்வியோடு தொடர்புபட்டுள்ள யாவரினதும் அறிவு, கைததிறன், மனப்பாங்கு விருததியை மையமாகக் கொண்டு இக் கண்காட்சி திட்டமிடப்பட்டுள்ளது, கண்காட்சிப் பொருட்களைத் தயாரிப்பதன்மூலம், விசேஷமாக இனங்காணல், வெளியிடல், விபரித்தல், பதிவுவைத்தல். தெரிதல், காரணங்காணல், பிரயோகம் நல்மனப்பாங்குகள் விருத்தியாகின்றன. வெறுமனே வகுப்பறையுள் இருந்து அறிமுறை மூலம் கற்பதால் மட்டும் கல்விவளராது”

இவ்வாறு யாழ். இளையதம்பி வித்தியாலயக் கல்விப் பொருட்காட்சியை ஆரம்பித்து வைத்துப்பேசிய நல்லூர் வட்டார கல்வி அதிகாரி திரு. சு சிவநாயகமூர்த்திகூறினுர். தொழில்நுட்பக் கல்வி அதிகாரி திரு ச. சுப்பிரமணியம் பேசுகையில் ‘மாணவர்களைப் பரீட்சைக்குத் தயார் பண்ணும் தொழிற்சாலையாக பாடசாலை இயங்காமல் மாணவர் வாழ்க்கையில்: சிந்தனையாளராகவும், செயலாற்றலுள்ளவர்களாகவும் வாழ்வதற்கு பயிற்சியளிக்கும் இடமாக விளங்கவேண்டும்” என்றூர்.

தொழிலதிபர் க. கனகராசா, கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் ச பஞ்சலிங்கம், பெரியபுலம் மகாவித்தியாலய அதிபர் வி.வெ. சிவபாலசிங்கம் ஆகியோரும் உரையாற்றினர்கள்.

## வடமராட்சியில் நடமாடும் சிகிச்சை நிலையம்

புலோலி திங்கள்

பருத்தித்துறை பிரஜைகள் குழு பருத்தித்துறை, உடுப்பிட்டித் தொகுதிகளில் புதிதாக ஆரம்பிக்கப் படவுள்ள “நடமாடும் வைத்திய சேவை”, திட்டத்திற்கு 10 000 ரூபாவை அன்பளிப்புச் செய்யவுள்ளது

இந்நடமாடும் வைத்திய சேவைத் திட்டத்திற்கான அம்புலன்ஸிற்கென நலன் விரும்பியொருவர் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான புதிய வான் ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளார்.

இவ்வானை அம்புலன்ஸாக மாற்றுவதற்கான செலவுகளை காங்கேசன்துறைச் சிமெந்துக் கூட்டுத்தாபனம் பொறுப்பேற்றுள்ளது.

பருத்தித்துறை ப.நோ கூ. சங்கம் 30 000 ரூபாவை வழங்கியுள்ளது. புலோலி ப. நோ கூ. சங்கமும் நிதியுதவி வழங்கத் தீர்மானித்துள்ளது இச் சேவையைத் திறம்பட நடாத்த மேலும் நிதி உதவிகள் தேவைப் படுவதால் நிதி உதவ விரும்புபவர்கள் பருத்தித்துறை சுகரதார வைத்திய அதிகாரி டாக்டர் கே. லலித்குமாருடன் தொடர்பு கொள்ளலாம்.

### வட்டு இந்து முதலிடம்

யாழ்ப்பாணம், செவ்.

வட்டுக்கோட்டை வட்டார ரீதியில் நடைபெற்ற பண்ணிசைப் போட்டியில் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மேற்பிரிவு குழுப்பாடலிலும், மத்தியபிரிவு தனிப்பாடலிலும் முதலாம் இடங்களைப் பெற்றுள்ளது.

### பொருட்காட்சி

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

நல்லையா விருந்தினர்களை வரவேற்று அவர்களின் ஒத்துழைப்புக்கு நன்றிதெரிவிக்கும்போது அனுபவத்துடன் கூடிய அறிவைப் பெறுவதற்கு உறுதுணையாக அமையும் இப் பொருட்காட்சியைஊக்குவிக்கும் கல்விப்பகுதியினரையும் பாராட்டினுர்.

### பொருட்காட்சி

புலோலி திங்கள்

நாகர்கோவில் மகா வித்தியாலய கல்விப் பொருட்காட்சி வித்தியாலயஅதிபர் திரு எஸ். பரமகுரு தலைமையில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்கள விவசாயக் கல்வியதிகாரி செல்வி ரீ. பெரியதம்பி கண்காட்சியைத்திறந்து வைத்தார்.

### சுகாதார வசதிகள்

புலோலி திங்கள்

வடமராட்சிப் பகுதியில் உள்ள அகதிகள்முகாம்களுக்கு பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே லலித்குமார் சென்று அகதிகளுக்கான சுகாதார வசதிகள் பற்றி கவனித்தார். அகதிகளுக்கு சுகாதார முறைகளைப் பேணுவது பற்றிய ஆலோசனைகளையும் வழங்கினுர் இப் பகுதிகளில் உள்ள ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையத் தொண்டர்களும் அகதிகள் முகாம்களுக்கான சுகாதார உதவிகளை வழங்கி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், செவ்.

நவாலியூர் முரசொலி சனசமூக நிலையத்தினதும் கிராம முன்னேற்றச் சங்கத்தினதும் வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் திரு. அ. சி ஜெபரத்தினம் தலைமையில் நடைபெற்றபோது புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்களாக திரு. என். சி, முருகேசு திரு. நா. செல்லத்துரை தலைவர், திரு. சு க. ஜெபரத்தினம்உபதலைவர் திரு. சாம் டிக்சன் செயலாளர் திரு. சி. பெ. அற்புதநாகன் உபசெயலாளர், திரு. வே. பாலநாதன் பொருளாளர். திரு வே பத்மநாதன் உப பொருளாளர்: திரு தியாகராசா கணக்காய்வாளராக திரு கிறிஸ்டிபோல் தெரிவு செய்யப்பட்டதுடன். 7பேர் கொண்ட நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

0 0 0

மூளாய் கூட்டுறவு ஐக்கிய வைத்தியசாலை சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் சுழிபுரம விக்ரோறியாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பெற்றனர், தலைவர். திரு. என். சிவகுரு செயலாளர், திரு சோ. க. வேலாயுதர் தனுதிகாரி. திரு. எஸ். இராமநாதன். மேலும் எட்டு நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

0 0 0

தொல்புரம் மூளாய் ஐக்கிய பரஸ்பர சகாயசங்க ஐம்பத்தொன்பதாவது வருடாந்தப் பொதுக்கூட்டம் மூளாய் சைவப்பிரகாச கனிஷ்ட மகா வித்தியாலய மண்டபத்தில் சங்கத்தலைவர் திரு கு. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. புது வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பெற்றனர்

தலைவர்; திரு. கு. சிவசுப்பிரமணியம் உபதலைவர்: திரு க. தெட்சணுமூர்த்தி செயலாளா: திரு மு. நவசிவாயம் உபசெயலாளர்: திரு. க வாமதேவன் தனுதிகாரி: திரு பொ ஆறுமுகம் மேலும் பன்னிரண்டு நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

0 0 0

மானிப்பாய் மத்தி ஐக்கிய நாணய சங்கத்தின் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது புதுவருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. என், விவேகானந்தராசா உப தலைவர் திரு. கே தேவராசா செயலாளர்: திரு. கே. திருநாவுக்கரசு பொருளாளர்: திரு. ஏ. எம். அருணுசலம்.

முதலாவது
### பிறந்ததின வாழ்த்து



### செல்வன் சுதந்திரன்

பத்மநாதன் இந்திரா தம்பதிகளின் செல்வப் புதல்வன் சுதந்திரன் தனதுமுதலாவது பிறந்த தினத்தை இன்று 8-7-86 ஜேர்மனியில் குதூகலமாகக் கொண்டாடுகிருர். இவரை அப்பா அம்மா, சுண்டுக்குழியில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, ராணி அத்தை, இந்திரன் சித்தப்பா, சிவா சித்தப்பா, திருசித்தப்பா, மாமா, மலர் அத்தை, துஷா மச்சாள். விமல் மச்சான், சவுதி சித்தப்பா, சித்தி, கேண்டாவில் பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், அத்தைமார், கனடாவில் வசிக்கும் மாமா அத்தை, அத்தான், அக்கா, ஜேர்மனி மாமா மற்றும் உற்றூர், உறவினர் புங்குடுதீவு மடத்துவெளி முருகன் திருவருளால் பல்கலையும்கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றூர்கள். C-3349

## பிரயாண ஒழுங்குகள்
### டென்மார்க், கனடா

(கொழும்பிலிருந்து நேரடிப் பிரயாணம்)

ஜூலை 15-ம் திகதி எமது முகவர் கூட்டிச்செல்வார்.

எமது காரியாலயத்தில் பதிவு செய்தவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

★ லிபியா ★ குவைத்
★ சவூதி அரேபியா

ஆகிய நாடுகளுக்கு வேலை வாய்ப்பு.

அத்துடன்

பாஸ்போட், BOND. ரிக்கற்றிங் ஆகியனவும் உடனடியாகச் செய்து கொடுக்கப்படும்.

### யூனிவேர்சல் ஏஜென்சி,

125 (455), ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமையில் பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக.)

(A 774

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
செவ்வாய்க்கிழமை 8-7-86

## கணபதி வாக்குமூலத்தில் குளறுபடி?

யாழ்ப்பாணம், செவ்

யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் இந்திய மீனவரான கணபதியின் வாக்குமூலம் திரிபுபடுத்தி எழுதப்பட்டதாகவும் இது விடயமாக போராளிகள் சிலர் தலையிட்டு புதிய வாக்குமூலம் பதியப்பட்டதாகவும் தெரியவருகிறது

மேலிடத்தின் உத்தரவின் பேரிலே வாக்குமூலம்பெற்றவர்கள் இவ்வாறு திரிபுபடுத்தி வாக்குமூலம் பெற்றதனை போராளிகள் சண்டுபிடித்து எச்சரிக்கை செய்துள்ளனர்.

மேலும் இந்திய மீனவர் பற்றி யாழ்ப்பாணப் பத்திரிகைகளில் வெளியாகும் செய்திகளில் பாதுகாப்பு வட்டாரங்கள் மிகவும் அக்கறை கொண்டுள்ளனர் எனவும் தெரியவருகிறது, [ஐ]

## மகாநாடு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம். செவ்வாய்

பனை அபிவிருத்திச்சபையால் நேற்று நடாத்தப்படவிருந்த பத்திரிகையாளர் மகாநாடு தவிர்க்கமுடியாத சாரணங்களால் இம்மாதம் 14ம் திகதி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

[மா]

## திடீர் பரிசோதனை

(யாழ்ப்பாணம் செவ்)

ஒலி, ஒளி மூன்றிய கட்டுப்பாட்டுக் குழுவின் வேண்டுகோளுக்கிணங்க நேற்றிரவு தமிழீழ மாணவர் பேரவை (ரெசோ) உள்ளூர் தொலைக்காட்சி நிலையங்கள் மீது திடீர் பரிசோதனை நடத்தியது.

இச் சோதனையின் போது சிலரது சேவைகள் எச்சரிக்கை செய்யப்பட்டு மறு அறிவித்தல்வரை நிறுத்தப்பட்டுள்ளது. [மா]

## முகாம்களில் அனுமதிப்பத்திரம் பெற்று

# ஆனையிறவைக் கடந்து செல்ல வாகனங்களுக்குத் தடை!

### அரச அதிபர் அனுமதி கோரப்படுகிறது!!

யாழ்ப்பாணம், செவ்.

யாழ். மாவட்டத்திலிருந்து நேற்று பலாலி, கோட்டை இராணுவ முகாங்களுக்குச் சென்று தென்னிலங்கை செல்வதற்கான அனுமதிப்பத்திரங்கள் பெறச் சென்ற வாகனங்களின் உரிமையாளர்கள் சென்றிக்கு நின்ற போராளிகளால் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டதாகத் தெரியவந்துள்ளது

மேலும் மேற்குறிப்பிட்ட முகாமகளிலிருந்து ஏற்கனவே அனுமதிப்பத்திரம் பெற்று நேற்று கொழும்பு நோக்கிச் சென்ற வாகனங்களும் ஆனையிறவுத்தடைமுகாமுக்கு இப்பால் வைத்து போராளிகளால் திருப்பி விடப்பட்டுள்ளன.

வாகனச் சொந்தக்காரர்கள் யாழ். அரசாங்க அதிபரின் அனுமதிப்பத்திரம் பெற்றுச் செல்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்வரை

எந்த வாகனங்களையும் ஆனையிறவுத் தடைமுகாமுக்கப்பால் செல்ல விடுவதில்லை என்று போராளிகள் தெரிவித்துள்ளதாக அறியப்படுகிறது

வாகனங்களின் உரிமையாளர்கள் லஞ்சம் கொடுத்தே வாகன அனுமதிப்பத்திரங்கள் பெற்றுச்செல்வதாகவும் கொழும்பில் வாங்கிவரும் பொருட்களை யாழ். குடாநாட்டில் சந்தைப்படுத்தும் பொழுது கொடுக்கும் லஞ்சத்துக்கமைவாக அதிகவிலைக்கு அப்பொருள்களை பொது மக்களுக்கு விற்பனை செய்வதாகவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்திலிருந்து நேற்று எந்தவித தனியார் வாகனங்களும் ஆனையிறவுத் தடை முகாமுக்கப்பால் செல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. [மா]

## அரசின்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

விளக்கமளிப்பதற்காக பல பொதுக் கூட்டங்களை நடத்துவதென ஸ்ரீ லங்கா மக்கள் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, லங்காசமாஜக் கட்சி, நவசமசமாஜக்கட்சி ஆகியவை தீர்மானித்துள்ளன.

இம்மாதம் 15 ம் திகதி நடைபெறவுள்ள அரசியல் கட்சிகளின் மாநாட்டின் பின்னர் இவை நடத்தப்படுமென ஸ்ரீ. ல ம. கட்சி செயலாளர் விஜய குமாரணதுங்கதெரிவித்துள்ளார். (ய-செ)

## பலாலியில் வாகன அனுமதிப்பத்திரம் வழங்க தற்காலிக பொலிஸ் பிரிவு

யாழ்ப்பாணம், செவ்வாய்.

பலாலி இராணுவ முகாமில் தற்காலிக பொலிஸ் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு செல்லும் வாகனங்களுக்கான அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காகவே இந்த பொலிஸ் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

ஒரு பொலிஸ் சார்ஜன்ட், ஆறு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் இந்த தற்காலிக பொலிஸ் பிரிவில கடமையாற்றுவார்கள்.

இப்பொலிஸார்கள் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் இருந்தே இந்த தற்காலிக பொலிஸ் பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். [து-மா]

## மாங்கேணி தாக்குதல் புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம், செவ்வாய்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மாங்கேணிஇராணுவ முகாமின் 3 கட்டிடங்கள்தமது இயக்கப் போராளிகளால் தகர்க்கப்பட்டதாக 'தமிழீழ விடுதலைப் புலிகள்' அரசியல் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது ;-

"மாங்கேணி இராணுவ முகாம்மீது கடந்த 5ம் திகதி நள்ளிரவு 11 45 மணியளவில் எம்மால் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டது.

இத்தாக்குதல் தொடர்ச்சியாக 3 மணிநேரம் நடைபெற்றது உக்கிர மோதலின் பின்பு முகாமின் இடதுபக்கமாக உட்புகுந்த எம்மவர் 3 பாரிய கட்டிடங்களை முற்றாகதகர்த்தனர். இதனுள் இருந்த அனைவரும் இடிபாடுகளிடையே அகப்பட்டுக் கொண்டனர். இத்தாக்குதலின் போது எம்மவர்கள் நவீனரக ஆயுதங்களை பாவித்தனர். பனிச்சங்கேணி, காயங்கேணி பாலங்களும் தகர்க்கப்பட்டன. இதனால் வேறுமுகாம்களில் இருந்து இம்முகாமிற்கு தரைவழியாக உதவிகள் கிடைப்பதில் தடை ஏற்பட்டது. 3 பொம்பர்களினதும், 2 ஹெலிகாப்டரினதும் பாரிய குண்டுவீச்சுக்களின் மத்தியிலும் எம்மவர் எதுவித இழப்புகளும் இன்றி முகாம் திரும்பினர்." [மா]

## மரண அறிவித்தல்

### சோமசுந்தரம் நடராசா

மணல்தரை ஒழுங்கை கந்தர்மடத்தைச் சேர்ந்த சோமசுந்சரம் நடராசா காலமாகிவிட்டார் இவர் பராசக்தியின் அன்புக் கணவரும், மதிவதனசேகரன் (பேர்லின்), இந்திராதேவி, வரதசேகரன் (ஜேர்மனி) ஆகியோரின் தந்தையும். கந்தசாமி [குவைத்], செங்காதேவி [ஜேர்மனி] ஆகியோரின் மாமனும், அரவிந்தன், பிரசாந்தி, சஞ்சீவன் (ஜேர்மனி), மணிவண்ணன், கார்த்திகா ஆகியோரின் பேரனுமாவார். ஈமைக்கிரியைகள் இன்று நண்பகல் 1 00 மணிக்கு கொக்குவில் மயானத்தில் நடைபெறும்.

(C 3364)

### சி. இராசநாயகம்

கட்டுடையைச் சேர்ந்த சி. இராசநாயகம் [ஓய்வுபெற்ற அதிபர், மலேசியா] காலமானார். இவர், காலஞ்சென்ற மீனாட்சியம்மாளின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சின்னத்தம்பு அன்னமுத்து அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்ற நல்லையாவின் அன்புச் சகோதரரும் ஆவார். ஈமக்கிரியை 8-7-86 [இன்று] செவ்வாய்க்கிழமை காலை 10 00 மணியளவில் மானிப்பாய் பிப்பலி மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
[C 3358] வயிவரநாதன் [மைத்துனர்]

### செபஸ்ரியாம்பிள்ளை மரியதாஸ்

[சில்லாலை]

சில்லாலை வடக்கு திரு. செபஸ்ரியாம்பிள்ளை மரியதாஸ் 7-7-1986 திங்கட்கிழமை காலமாகிவிட்டார். இவர், காலஞ்சென்ற திருமதி அருளம்மாவின் அன்புக் கணவரும், அருள்தாஸ் (மனோகரன், பிரான்ஸ்] அன்ரன் அமலதாஸ், அருட்குமார் [பிரான்ஸ்) அருள்மரியநாயகி, மேரிராணி, மனோராணி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். நல்லடக்கம் சில்லாலை சேமக்காலையில் 8-7-86 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-30 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்கப்படுகிறார்கள்.

அன்பு மனைவி:
செலினம்மா
[மல்லிகா]

சில்லாலை வடக்கு,
8-7-1986

[C3361]

### மூத்ததம்பி சிவசம்பு

தெல்லிப்பழை வீமன்காமம் வடக்கைச்சேர்ந்தவரும், தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் லிகிதரா க் கடமையாற்றி ஓய்வுபெற்றவருமான மூத்ததம்பி சிவசம்பு காலமாகிவிட்டார். இவர் பரமேஸ்வரியின் அன்புக்கணவரும், சிவனேஸ்வரன் [கணக்காளர், அரசபெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் ஹற்றன்), பரமேஸ்வரன் [நிலஅளவையாளர்), சிவனேஸ்வரி, சகுந்தலேஸ்வரி, லோகேஸ்வரி, லோகேஸ்வரன் (ஜேர்மனி], புவனேஸ்வரன் (அமெரிக்கா], சகுந்தலேஸ்வரன் (சிமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை), சர்வேஸ்வரன், வசந்தகுமாரி ஆகியோரின் அன்புத்தந்தையும், கனகநாயகி, வாமதேவன் (ஜெர்மனி), வசந்தினி ஆகியோரின் மாமனும், சுதர்ஜினி, சர்மிலி, வாகீசன், விநோதன் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் (இன்று] 8-7-86 செவ்வாய்க்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு நடைபெறும்.

(C3350)

## சகஜநிலை ஏற்பட "கிளிநொச்சி ராணுவ முகாம் மூடப்படவேண்டும்!" -அரச அதிபரிடம் வேண்டுகோள்!!

(நமது கிளிநொச்சி நிருபர்)

கடந்த ஒரு மாதங்களுக்கு மேலாக கிளிநொச்சி நகரமும் அதை அண்டியுள்ள பகுதிகளும் முற்றாக ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளன. இந்நிலைமைக்கு காரணமாக இருக்கும் கிளிநொச்சி இராணுவ முகாமை மூடிவிடுமாறும் கிளிநொச்சிப்பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்துள்ள சுமார் ஐம்பதினாயிரம் மக்கள் சொந்த இடம் திரும்பும் சூழ்நிலையை உருவாக்குமாறும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபருக்கு கிளிநொச்சி மக்கள் சார்பாக வேண்டுகோள் ஒன்று விடுக்கப்பட்டுள்ளது.

அவ்வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: கடந்த மாதம் 4-ம் திகதி முதல் இருந்து கிளிநொச்சியில் சகல நிர்வாகங்களும் ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளன. பொதுமக்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர் பலரதுவீடுகள், கடைகள் குண்டுவீச்சால் இடித்து தரைமட்டமாகியுள்ளன. மக்களது நாளாந்தவாழ்க்கை அனைத்தும் சீர்குலைந்து உடமைகளை கைவிட்ட நிலையில் அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

விவசாயம் செய்யமுடியாத நிலையில் விவசாய நிலங்கள் கவனிப்பாரற்று வெறும் பாலைவனமாகியுள்ளன. இந்த சீரற்ற நிலைமைகளுக்கு காரணமாக இருப்பது இராணுவ முகாமே.

இந்நிலையில் மீண்டும் பொது மக்கள் வாழ்க்கையை சீரமைக்கும் வகையில் கிளிநொச்சி இராணுவமுகாமை மூடிவிட ஆவன செய்யுங்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம் செவ்

நீர்வேலி அருள் மிகு செல்லக் கதிர்காம சுவாமி ஆலய அலங்கார உற்சவம் நேற்று ஆரம்பமாகியது. இம்மாதம் 22-ம் திகதி தீர்த்தோற்சவமும் 23-ம் திகதி திருக்கல்யாண உற்சவமும் நடைபெறவுள்ளன.

## மாணவனின்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அகற்றும் பிரிவினர் வரவழைக்கப்பட்டனர். ஆயினும் அந்த சூட்கேஸ் ஒரு மாணவனுடையது என பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு நடைபெற்றது. காலியிலிருந்து வந்த பஸ் ஒன்றிலேயே இந்த சூட்கேஸ் இருக்கக் காணப்பட்டது.

அச் சூட்கேஸினுள் சில கடதாசிகளும் விலையுயர்ந்த அகராதி ஒன்றும் காணப்பட்டது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜூலை மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone 22389, 84126